# களத்தில்




எமது எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள். எமது எதிரியையும், அவனது நோக்கத்தையும் நாம் இனம் கண்டுகொள்வது சுலபம். ஆனால் எமது துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகிறார்கள். எதிரியின் கைப் பொம்மைகளாகச் செயற்படுகின்றார்கள். நமது சுதந்திரத்திற்காகவும், மக்க ளபிலாசைகளுக்காகவும் சொந்த இரத்தத்தையே காட்டிக் கொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்குச் சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


(03.06.1999) | தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் | (187) | அன்பளிப்பு : 60 p


# போர் எழுச்சிகொள்ளும் தமிழ்த் தேசியம்

சந்திரிகா தமிழீழத் தாயகத்தின் மீதும் தமிழர்கள் மேலும் தொடுத்து வரும் மக்கள் மீதான யுத்தம் தமிழீழத் தாயகத்தில் மக்களனைவரையும் அடக்குமுறைக்கு எதிராக பேரெழுச்சி கொள்ள வைத்துள்ளது. (தொடர்ச்சி 8-ம் பக்கம்)




## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

பாதை திறந்து படைகளை இணைத்து போரினில் தமிழரை வென்றிடத் துடித்த சந்திரிகா ஆட்சிக்கு ஜயசிக்குறுய் படுதோல்வியைக் கொடுத்த போதிலும் சந்திரிகா அரசின் தமிழர்களை இராணுவப் படைபலம் கொண்டு ஒடுக்கி அவர்களது தமிழீழத் தாயகத்தை சிறீலங்காவின் ஒரு பகுதியாக மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் எந்த மாற்றத்தையும் கொடுக்கவில்லை.

புதிய வழிகளைப் புதிய உத்திகளைக் கையாண்டு தமிழ் மக்கள் மீதான யுத்தத்தினை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்று அல்லும்பகலும் சந்திரிகா அரசாங்கம் புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறது. இதன் ஒரு அங்கமாக, வியட்னாமில் அமெரிக்கா செய்த அதே பாணியில் தமிழர்களின் மேலான மற்றொரு ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றில் இறங்குவதற்கு சந்திரிகா அரசாங்கம் திட்டமிட்டு அதற்கான செயற்திட்டங்களை வகுத்து ஆயுதக் கொள்வனவையும் ஒரளவுக்கு முடித்து புதிய யுத்தமொன்றுக்கு ஆயத்தமாகி நிற்கிறது.

இந்த வியட்னாம் பாணி யுத்தம் என்பது எந்த பிரதேசங்களுக்கு ஊடாக பாதை திறப்பு முயற்சியில் இறங்கியதோ அதே பிரதேசத்தைப் பரவலான வகையில் தாக்கியழிப்பதன் மூலம் அந்தப்பகுதிகளில் வாழும் மக்களையும் அவர்களுடன் இணைந்து நின்று இராணுவ முன்னேற்றங்களை முறியடிக்கும் விடுதலைப் புலிகளையும் அழிப்பதன் மூலம் தான் பாதை திறப்பு நடவடிக்கையின் மூலம் நிறைவேற்ற முனைந்த அதே இராணுவ இலக்குகளை அடைதல் என்பதாகும்.

சிறீலங்காவின் இந்த வியட்னாம் பாணி யுத்த தந்திரோபாயம் எதிரி தனக்கு இரண்டு வழிகளில் சாதகமாக அமையும் என எண்ணுகின்றான். முதல் வழியில் பரவலான தாக்குதல் என்பதை முறியடிப்பதற்கு பெருமளவிலான ஆட்பலம் விடுதலைப் புலிகளுக்குத் தேவைப்படும் இதனை விடுதலைப் புலிகள் திரட்டுவதற்கு இடையில் தம்மால் ஆக்கிரமிக்க கூடிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டால் அது மக்களுக்கு போராட்ட வெற்றி குறித்த நம்பிக்கையீனங்களை அதிகரிக்க வைத்து மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்தல் என்ற தனது இலக்கை அடைய உதவும் என எதிரி நம்புகின்றான். இரண்டாவது வழியில் பரவலான தாக்குதல், பலத்த உயிர், உடல், பொருட் சேதங்களை விளைவிக்கும். இது தனது தமிழின அழிப்பு என்ற தனது அரசியல் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வழி வகுக்கும் என எதிரி எதிர்பார்க்கின்றான். அத்துடன் இந்தப் பரவலான தாக்குதல்கள் மூலம் தமிழீழத் தேசத்தின் உட்கட்டுமானங்களைச் சிதைத்தல் என்ற பிரதான இலக்கையும் நிறைவேற்றி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுத்த இந்த பரவலான தாக்குதல் உதவும் என சந்திரிகா, ரத்வத்தை, பண்டாரநாயக்கா குடும்ப ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஒருவகையில் சந்திரிகாவின் இந்த வியட்னாம் பாணி யுத்த தந்திரோபாயம் இதுவரை கையாளப்பட்ட எல்லாத் தந்திரோபாயங்களை விட மிகமிக ஆபத்தானது. இந்த வியட்னாம் பாணி யுத்தம் என்பது நேரடியாகத் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்குவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கத்தை ஏற்படுத்த சந்திரிகா முனைகின்றார். இந்த அப்பட்டமான இனஅழிப்பின் போது மிகப் பெரிய அளவில் தமிழ்ப் பொதுமக்களின் உயிர் இழப்புக்கள் ஏற்படுவதைத் தடுப்பதானால் இரண்டு நடவடிக்கைகள் உடனடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளால் துரிதகெதியில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

முதலாவதாக தமிழ்ப் பொதுமக்கள் தங்கள் பாதுகாப்புக்களை மேற்கொள்வதற்கான அவசிய தற்பாதுகாப்பு பயிற்சிகளையும் ஆயுதபலத்தையும் சாதாரண தமிழ்ப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே சந்திரிகா சிங்களத் தேசியத்தின் சனத்தொகைப் பெரும்பான்மையையும் பொருளாதார வறுமை நிலையையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி திட்டமிடும் இந்தக் கொடிய மனிதாய உணர்வற்ற தமிழின அழிப்பு நடவடிக்கையை முறியடிக்க முடியும்.



# புதிய உத்திகளுடன் புதிய யுத்தத்திற்கு ஆயத்தம்

இரண்டாவதாக பரவலான யுத்தம் என்று கூறும் பொழுது அது சிறீலங்காவின் வான்படையின் பரவலான தாக்குதல்கள் மூலமே சிறீலங்காவுக்கு சாதகமான சூழ்நிலைகளை தோற்றுவிக்கும். இதற்கு சிறீலங்கா தனது வான் கலங்களைக் கூட்டாகப் பயன்படுத்தும் செயலில் இறங்கும். அந்த நேரத்தில் அந்த வான்கலங்கள் தமிழீழ மண்ணில் எவ்வளவு வேகமாக விழுத்தப்படுகிறதோ அவ்வளவு விரைவாக எம்மக்கள் பாதுகாப்பு பெறுவர்.

சிறீலங்கா ஜயசிக்குறுய் களத்தில் படுதோல்விகளைத் தழுவிக் கொள்ளத் தொடங்கிய 1998 இலேயே சிறீலங்கா அடுத்து எந்த வகையில் தமிழீழ மக்கள் மேல் யுத்தத்தைத் திட்டமிடப் போகிறது என இனங்கண்டு, மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டங்களாக மக்களுக்குத் தற்பாதுகாப்புப்பலம் வழங்கும் திட்டத்தையும் சிறீலங்கா வான்படை வலிமையை தமிழீழ வான்படை கொண்டு எதிர்க்கும் செயற்பாட்டையும் எங்கள் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் செயற்படுத்தியுள்ளதால் சிறீலங்கா தனது புதிய யுத்தத் திட்டத்தைக்கூட தான் நினைத்த மாத்திரத்தில் தொடங்க முடியாது பலத்த ஆயத்தங்களை மேற்கொண்டு செயற்பட முனைகிறது.

எங்கள் தேசத் தலைவர் பிரபாகரனின் தமிழீழ வான்படை கொண்டு சிங்கள வான்படையினை எதிர்க்கும் தீரமான முயற்சிக்கு முதுகெலும்பாக இருக்க வேண்டியவர்களாகப் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உள்ளோம். தமிழீழ வான்படையின் செழுமை, வளமை எல்லாமே புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் அளிக்கும் அதிஉச்ச உழைப்பிலேயே தங்கியுள்ளது. இதற்காக நாம் எல்லோருமே நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேர உழைப்பையாவது ஆகக் குறைந்த பங்களிப்பாக அளிப்போம் என எடுத்துள்ள உறுதிமொழியின் தொடர்ச்சியான செயலாக்கத்தின் மூலமே இந்த இலக்கை எமது தமிழீழ மக்கள் விரைவாகவும் வலிமையாகவும் செயற்படுத்துவர். இதனை மறவாது நாம் ஒவ்வொருவருமே எமது குடும்பக் கடமைகளில் ஒன்றாகக் கருதி இந்தத் தேசக்கடமையினைச் செய்ய வேண்டிய பொறுப்புள்ளவர்களாக செயற்படத் தொடங்கிய நாம் எல்லோருமே மேலும் மேலும் வேகமாக பணி செய்து எமது மக்களைப் பாதுகாக்கும் பணியில் நாமும் ஈடுபடும் பேறு எமக்கும் கிடைத்தது என மன நிறைவு எய்துவோம்.

அடுத்ததாக இந்த வியட்னாம் பாணி யுத்தத்தின் மக்களின் அழிவுகளை உலகு நன்கு அறியும். இன்று அதே பாணியிலான பரவலாக தாக்குதல்களை மக்கள் வாழும் காடுசார் பிரதேசங்களில் சிறீலங்கா நடாத்த முற்படும் சர்வதேச குற்றச் செயலை உலகிற்கு பலமாக எடுத்துரைத்து உலகின் கண்களில் எமது மக்கள் படும் துன்பங்களை கொண்டு வந்து நிறுத்த வேண்டிய மற்றொரு பொறுப்பும் எம்முன் இன்று உள்ளது. இதனை தனியாகவும் கூட்டாகவும் இன்றே செய்ய வேண்டும். நாளை செய்வோம், மற்றவர்கள் செய்கின்றார்கள் தானே என்ற சாட்டுப் போக்குகளில் எல்லாம் எமது பொறுப்பிற்கான எமது பங்களிப்பை வழங்குவதில் காலதாமதம் செய்யாது இன்றே புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் எல்லோருமே எமது மக்களின் துன்பநிலையையும் சிறீலங்காவின் இனஅழிப்பு நோக்கிலான புதிய யுத்த தந்திரோபாயங்களையும் உலகிற்கு வெளிப்படுத்துவோம்.

இவை மூலம் புதிய யுத்த தந்திரோபாயம் என்ற பெயரில் எமது வளமான முல்லைநில பிரதேசங்களிலும் மருதநிலப் பிரதேசங்களிலும் வாழும் எங்கள் சந்ததிகள்மேல், சொந்தங்கள்மேல் சிறீலங்கா மேற்கொள்ள ஆரம்பித்திருக்கும் புதிய யுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் சத்தியத்தின், தர்மத்தின் துணையுடன் முறியடிக்க எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெற நாமும் உழைக்கும் நிறைவில் மகிழ்ச்சியடைவோம்.





| | | |
|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning |
| **NETHERLANDS**<br>TCC<br>Grt. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. |

| | | |
|---|---|---|
| **FRANCE**<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | **ITALY**<br>TCC<br>Via Vincenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

# சிங்களத்தின் ரணகோசா தமிழர்களின் போர் எழுச்சி



வன்னிப்பகுதி தமிழீழ - சிறீலங்கா போரின் மையக் களமாக உருவாகியுள்ளது. தமிழர்களின் தேசியத் தலைமையும் பிரதான படைப்பலமும் அரசியல் - சமூக - பண்பாட்டு அமைப்புக்களும் மையம் கொண்டுள்ள வன்னியை சுற்றிவளைப்பதற்கும் சிதைப்பதற்குமான மற்றுமொரு ஜெயசிக்குறுவான "ரணகோச" தொடர்ந்தும் பகுதிபகுதியாக முயற்சிக்கப்படுகின்றது.

பிரதேசங்களைக் கைப்பற்றி - ஆக்கிரமித்து சிறீலங்காவின் இராணுவ நிர்வாகத்தை விஸ்தரிப்பதன் மூலம் புலிகளைத் தோற்கடித்துவிடலாம் என்ற சந்திரிகா கோட்பாட்டுக்கு ஒப்ப "ரணகோச" மடு வரை பிரதேச பறிப்பை மேற்கொண்டது. அதற்கு அப்பால் கால் வைக்க முற்பட்டபோது பள்ளமடுவில் வைத்து புலிகள் தொடுத்த சமர் வன்னியின் மேற்கு அரங்கம் ஊடான நகர்வை பின்னடைய வைத்தது.

சிறீலங்கா அரசு வன்னியை நடுவாகப் பிளந்து புலிகளை அழித்துவிடலாம் என்ற

வன்னியில் இடம் பெறும் போர் தமது படைகளுக்கும் அதற்கு ஈடு கொடுக்கும் ஆற்றல் உள்ள தமிழர் படைகளுக்கும் இடையேயான முழு அளவிலான சமர் என்பதை சிறீலங்கா தலைமையும் ஆய்வாளரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். சிறீலங்காவின் முன்னாள் இராஜ தந்திரி கே.கோடகே சமீபத்தில் எழுதிய தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றில் இன்றைய இனச் சிக்கலும் புலிகள் பெற்றுள்ள ஈடு கொடுக்கும் கடுகல ஆற்றலும் எமக்கு ஒரு நல்ல தாக்கமுள்ள இராணுவ தந்திரோபாயம் ஒன்று தேவையெனக் காட்டுகின்றது என வலியுறுத்தியுள்ளார்.

சிங்களத் தரைப்படைகள் தாம் புலிகளுடன் ஒரு சமநிலை அச்சிலே சுழல்வதாக உணர்வதை அதனது செயற்பாடுகள் மூலம் அறியத் தருகின்றனர். ஜெயசிக்குறுய் நடவடிக்கையை கைவிட்டபோது இந்த அங்கீகாரம் பகிரங்கமானது. ரிவிபல, "ரணகோச" போன்ற தொடர்ச்சியற்ற இராணுவ நடவடிக்கைகள் இச்சமநிலையை வெளிக்காட்டின.

ஒரு "தமிழர்" குழு புலிகளின் பயிற்சித் திட்டத்தை களங்கப்படுத்தும் மனித உரிமைகள் அறிக்கைகளை வருக்கின்றது.

சிறீலங்க இராணுவ இயந்திரம் இந்தப் பாதகமான போக்கை எதிர் கொள்ள வான், கடல் பலத்தை உபயோகிக்க முற்படுகின்றது.

சிறீலங்காவின் இராணுவ சிந்தனையாளர்கள் புலிகளுக்கான ஆயுதத்தளபாட விநியோகங்களை தடுத்து நிறுத்துவதை நோக்காகக் கொண்ட இராணுவ அரசியல் தந்திரோபாயங்களை தற்போது பிரதானப்படுத்துகின்றனர்.

அ) சிறீலங்கா கடற் படைக்கு புதிய இஸ்ரேலிய டோராப் பீரங்கிப்படகுகளும் சீனப்படகுகளும் வாங்கப்பட்டுள்ளன. புலிகளின் விநியோகப்பாதையை குறிவைத்து இப் பீரங்கிப்படகுகளும் கடற் படைக்கப்பல்களும் போர்நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவதாக அறிவிக்கப்படுகின்றது. தமது இந் நடவடிக்கைக்கு சாதகமாக இந்தியக் கடற்படையைப் பயன்படுத்தும் இரகசியத் திட்டத்தை சிறீலங்கா பின்பற்றுகின்றது. இந்திய அரசைத்தான்டி நேரடியாக இரு நாட்டுக் கடற்படைகளுக்கும் இடையேயான உறவும், கூட்டு நடவடிக்கை [illegible] சிறீலங்கா வாய் கிழியப் [illegible]

ஆ) சிறீலங்காவின் அரசியல் இராஜதந்திர இயந்திரம் எதிர்ப்படும் சகல நாடுகளையும் அணுகி இங்கிருந்து புலிகள் ஆயுத கொள்வனவை மேற்கொள்கின்றார்கள் இங்கிருந்து புலிகள் கப்பல்களில் ஆயுதங்களை ஏற்றிச் செல்கின்றார்கள் என குற்றம் சாட்டுவதன் மூலம் புலிகள் மீதான ஒரு இராஜ தந்திர வளிந்து தாக்குதலை நடாத்துகின்றது.

இக்கடற்போரை வெல்லும் நடவடிக்கைகள் வன்னி மீதான சிறீலங்கா போர் நடவடிக்கைகளுக்கு பிரதான உத்தியாக அமையும் அதேவேளை யாழ். குடாவில் சிக்குண்டுள்ள படையினரைப் பாதுகாக்கும் மறு நோக்கத்தையும் கொண்டுள்ளது.

வான் பரப்பினை புலிகளுக்கு எதிரான போரில் முழுமையாகப் பயன்படுத்த சிறீலங்காவால் முடியாமல் இருப்பதன் மூலகாரணம் பொருளாதார பற்றாக் குறை போயாயினும் செய்மதிகளைப்பயன்படுத்தி புலிகளின் பாரிய தரைப்படை நகர்வினை கண்காணிப்பது போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக சண்டே. ரைம்ஸ் எழுதுகின்றது.

சந்திரிகா போரை நிறுத்த முடியாது என சிங்கள மதத் தலைமையிடம் கூறியிருந்தமையும் தனது இராஜதந்திர பரப்புரைகளின் வெற்றி எதிர்காலத்தில் தெரியவரும் என கதிர்காமர் தாய்லாந்தில் "சாத்திரம்" கூறியமையும் இந் நோக்கானதே ஆகும்.

எதிர்வரும் காலத்தில் தனது தரைப்படையின் மனோபலத்தை அதிகரித்து போரைக் கூர்மைப்படுத்தி இனப்படுகொலை ஒன்றையே நடாத்த சிறீலங்கா அரசு முற்படும். தனது வான் பலத்தையும் பீரங்கிப் பலத்தையும் தமிழர் குடியிருப்புக்கள் மீது பயன்படுத்த முற்படும். இவற்றிற்கு எதிரான போரில் தமிழர்கள் தம்மை ஈடு படுத்துவது இன்றைய காலத்தின் பணியாக உள்ளது.



நோக்கில் வகுத்த ஜெயசிக்குறுப் படைத்த இராணுவ பொருளாதார சேதாரங்களையும் உயிர்ச் சேதாரங்களையும் கொடுத்ததால் மேற்குப் பகுதியூடாக நகர்ந்து ஜெயசிக்குறுவினால் இழந்து போன தமது அரசியலும் ஆளுமையும் இராணுவத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முற்பட்டது.

சில கொழும்பு இராணுவ நிபுணர்கள் "ரணகோச" நடவடிக்கையானது போரை வன்னிப்பகுதி எங்கும் விரிவு படுத்தி புலிகளை பலபோர்முனைகளில் ஒரே நேரத்தில் போர்புரிய வைப்பதற்கான உத்தி எனக் கருதுகின்றனர். உயர் கடுகல ஆற்றல் வான்படைகளின் பலம் என்பனவற்றை தமக்கான மேலதிக சாதக சூழ்நிலையாக சிறீலங்கா கருதுகின்றது.

ஆயினும் போரை எங்கே, எப்போது, எவ்வாறு, நடத்துவது என்ற மூலமான விடயத்தை எமது தேசியத் தலைவர் தனது கைகளில் வைத்துள்ளமையால் "ரணகோச" தன் உண்மையான இலக்கு எது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க முடியாது திண்டாடுகிறது. போர் முனையில் புலிகள் பெற்ற மனோவியல் ரீதியிலான பலம் இது.

## நரதன்

வன்னியில் இடம்பெறும் போர் எழுச்சி நிகழ்வுகளும் தமிழீழம் பூராவும் இடம் பெறும் புலிகளின் புதிய படையணிகளைத் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளும் தரைப்போர் ஒரு முடிவை நோக்கிச் செல்வதை எதிர்க்குப் புலப்படுத்தியுள்ளது. புலிகள் தற்போதுள்ள சமநிலையை தமக்கு சாதகமாக திருப்புவதற்கான கட்டுமானப்பணியில் ஈடுபடுவதை எதிரி அவதானித்துள்ளான்.

மன்னாரில் பிரபாகரன் 7000 புலிகளை பீரங்கிகளுடன் அனுப்பி அங்கு பாரிய புதிய பயிற்சி நடவடிக்கைக்காக ஆட்களைத் திரட்டுவதாக கொழும்பில் சண்டே லீடர் எழுதியுள்ளது. தென்தமிழீழத்தில் புலிகளின் படையணியில் பலநூறு இளைஞர்கள் மாதம் தோறும் இணைந்து வருவதாக Midweek Mirror எழுதுகின்றது. சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு புலிகளின் புதிய இராணுவப்பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

சிறீலங்காவின் ஆதரவில் இயங்கும்

## தமிழீழம் உருவாக அவுஸ்திரேலிய அரசு உதவவேண்டும்

**- அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் உறுப்பினர் வேண்டுகோள்**



"ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்திலிருந்து சிறீலங்கா இராணுவம் மீளப் பெறப்பட வேண்டும்" என அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் (01.06.1999) உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மார்பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை குறிவைத்து செயற்படுகின்றது. இதன் விளைவாகக் காணாமல் போதல், நீதிக்குப் புறம்பான படுகொலைகள், பாலியல் வன்முறைகள், முறையற்ற கைதுகள் என்பன இடம்பெறுகின்றன. 850,000 தமிழர்கள் இடம்பெயர்ந்து குடிநீர், மருந்து, உணவுகள் போன்றவற்றிற்கு பற்றாக் குறையுள்ள மோசமான சூழ்நிலையில் வாழ்கின்றனர்.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தவத்துடன் சிறீலங்கா அரசும் தமிழர்களின் தலைமையான விடுதலைப் புலிகளும் பேசவேண்டும்.

மில்லியன் கணக்கான தமிழர்கள் பகிர்ந்து கொள்ளும் கனவான தமிழர் தாயகத்தை அடைய உதவும் இறுதியானதும், சாத்தியமானதுமான தீர்வைக்கான உழைக்கவேண்டிய தார்மீகக் கடமை அவுஸ்திரேலிய அரசுக்கு உண்டு எனவும் திரு.ஜோன் மார்பி கோரினார்.

# தூது

அன்புள்ள கண்ணனுக்கு

என் அன்பும் வணக்கமும்,

உனதும் உனது குடும்பத்தினரதும் சுகம் அறியும் ஆவல் உந்த, கடந்த சில மாதங்களாக உனது கடிதத்திற்காக இங்கே நாங்கள் எல்லோரும் காத்திருக்கிறோம்.

இந்த உலகம் தான் எவ்வளவு வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்தச் சுழலில்சிக்கிச் சிக்கி காலம் அழிந்து கொண்டே போகின்றது. மணிக்கு மணி மாற்றங்கள். மாற்றங்களுக்குப் பழக்கப்பட்டது தானே எங்களுடைய வாழ்க்கை.

நீங்கள் எல்லோரும் இன்றும் அதே பழைய முகவரியில் தான் இருக்கின்றீர்களா? பதற்றமும், அச்சமும் நிறைந்த அதே வாழ்க்கைதானா இப்போதும்? அரச வானொலி மற்றும் பத்திரிகைச் செய்திகளின் மூலம் சரியான தகவல்களை எப்போதுமே பெற முடியாதென்பதை நீ நன்கு தெரிந்திருப்பாய் என்றே எண்ணுகிறேன். எமது வாழ்வில் கடிதங்கள் தானே நம்பிக்கையூட்டக் கூடியனவாகவும் உண்மையானதாகவும் சுய ஆளுமையுடையனவாகவுமிருக்கின்றன எப்போதும். நீ இது நாள் வரை கடிதம் எழுதாததற்கு, எவ்வளவோ நெருக்குவாரங்களையும் துயரங்களையும் அனுபவித்தாய் என்பதற்கு எந்தச் சாட்சியங்களும் என்னிடம் இல்லை.

இராணுவத்தினரால் கடிதங்கள் பிரித்துப் படிக்கப்படுகின்றன என்று எப்போதோ எழுதியிருந்தாய், கடிதங்கள் எப்போதுமே மனிதர்களின் இரகசியங்களை தமது மடிப்புக்களில் ஒளித்துவைத்துக் கொண்டே, பயணப்பட்டிருக்கின்றன. அதுவும் எங்களின் வாழ்வு கடிதங்களிலே - ரகசியங்களிலே - இயங்கிக் கொண்டிருப்பதால் எமது ரகசியங்களை அறியும் ஆவலில் இராணுவம் இவ்வாறான மோசமான செயலை எந்தவித வெட்கமோ கூச்சமோ அற்றுச் செய்து கொண்டிருக்கின்றது. மக்களில் அக்கறையுள்ளவர்களாகக் காட்டும் அரசும் அதன் இராணுவமும் இந்தச் சின்ன விசயத்திலேயே நம்பிக்கையீனமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக சில கடிதங்கள் போய்ச்சேர வேண்டிய இடத்தை எப்போதுமே அடைவதில்லை.

சிவா இடையில் படிப்பை நிறுத்திவிட்டு தேங்காய் வியாபாரம் செய்கிறான். உனக்கே தெரியும் எங்களது வகுப்பில் மிக நன்றாகப் படிக்கக் கூடிய முதல் ஐவரில் அவன் முதலாவதாக இருப்பவன். இடப்பெயர்வின் பின் நாங்கள் எல்லோரும் கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து தடவைகள் இடம்பெயர்ந்து வெவ்வேறு பாடசாலையில் ஒன்றாகவே படிப்பைத் தொடர்ந்தோம் - தொடர்ந்து படிப்பில் அக்கறைப்படுத்த முடியாத அளவிற்கு அவன் நொந்து போனான். இதற்கு அரசாங்கம் எம்மீது திணித்த, திணித்துக்கொண்டிருக்கும் யுத்த நெருக்கடிகளே காரணம் என்பதை சொல்லாமலே நீ புரிந்து கொள்வாய். இப்போது தான் 3ம் தவணைப் பரீட்சை முடிந்து க.பொ.த. சாதாரணப் பரீட்சை ஆரம்பமாகியிருக்கின்றது. பள்ளிக்கூடங்களில் அனேகமானவை கிடுகுக் கூரைகளால் ஆனவை என்பதால் இந்த மழைக்காலத்தில் பரீட்சை எழுதுவது மிகவும் சிரமமானதாகவே இருக்கிறது. இதைவிட இராணுவத்தினரின் ஷெல் அடிகளும் குண்டு வீச்சு விமானங்களின் அகோரத்தாக்குதலும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது, இதனால் மாணவர்களில் ஏராளமானோர் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதையே தவிர்த்து விட்டார்கள். தமிழருடைய கல்வி எவ்வாறெல்லாம் சீரழிக்கப்படுகின்றது பார்த்தாயா?

தொடர்ந்து, துரத்திவரும் காட்டுத்தீயைப் போல ஒட்டுசுட்டான் பகுதியை நோக்கி இராணுவம் புதியதொரு இராணுவ நடவடிக்கையை தொடங்கியிருக்கின்றது. ஜெயசிக்குறு நிறுத்தப்பட்டதாகவும் 'ரிவிபல' [சூரியபலம்] என்றொரு புதிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதும் செய்தி. ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இந்த நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்திருக்கின்றார்கள். இந்த மழைக்காலத்தில் வீடுகளை விட்டு தமது நிலபுலன்களை விட்டு மீண்டும் துரத்தியடிக்கப்பட்ட மக்கள் எங்கு தான் போவார்கள். வீதிகளிலும் காடுகளிலும் பாடசாலைகளிலும் மக்கள் நிறைந்து வழிகிறார்கள். பாடசாலைகள் அகதி மக்களால் நிறைந்து வழிகிறது. பரீட்சைக் காலமாக இது இருப்பதால் மாணவர்கள் சரிவர பரீட்சை எழுதமுடியாத அபாயமும் இதனால் நேர்ந்துள்ளது.

மாணவர்களில் ஏராளமானோர் உளவியல் ரீதியாக பெரியளவில் பாதிப்படைந்துள்ளவர்களாகியிருக்கிறார்கள். எமது இளம் தலைமுறையினர், நாம் எவ்வாறு சிதைக்கப்படுகிறோம் என்று உணரமுடிகிறதா உன்னால்.

தமிழ் மக்களின் இருப்பின் மீதும் அவர்களின் கலாச்சாரம் - பண்பாட்டின் மீதும் சிங்கள அரசு செலுத்தி வரும் ஆதிக்கம், அவர்களுக்கெதிராக யுத்தமிடும், கொதித்தெழும் அவர்களை எதிர்க்கும் எண்ணத்தையே எம்மில் மேலோங்கச் செய்கிறது. அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு ஒடுக்குமுறையின் போதும் நாம் அவர்களுக்கெதிராக குரல் கொடுக்கவும் யுத்தமிடவும் வேண்டியவர்களாகிறோம். இந்த யுத்தத்திற்கு அரசே காரணம்.

அடுத்தது, இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணவெட்டு இன்னும் அமுலில் இருப்பது பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். அரச அதிபர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசாங்கத்தின் மீது கொடுத்த அழுத்தங்கள் கல்லின் மீது பாலை ஊற்றிய கதையாகவே போயிருக்கிறது. இந்த லட்சணத்தில் தன்னோடு வந்து இருக்குமாறு - இராணுவ பிரதேசங்களில் - மக்களுக்கு அழைப்பு விட்டுக் கொண்டிருக்கின்றது அரசு. தெரிந்தோ தெரியாமலோ இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியிருக்கும் எமது மக்களின் நிலைபற்றி நீ கேள்விப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறாய். கைது செய்வது, காணாமலாக்குவது - புதைகுழியில் புதைப்பது - பாலியல் வல்லுறவிற்குள்ளாக்குவது - என நீளும் இந்த அரச பயங்கரவாதத்திற்குள் எப்படி மக்கள் நிம்மதியுடன் வாழமுடியும் அல்லது இவ்வாறு வாழச் சொல்லி - எல்லாவற்றையும் மூடி மறைத்துக்கொண்டு - எந்த முகத்தோடு அரசு அழைக்க முடியும்? அரசின் இந்தக் கேலிக்கூத்து பற்றி நகச்சுவை உணர்வோடு என்னிப்பார்ப்பதைத் தவிர்க்க இயலவில்லை.



அரசின் பிடிக்குள் நாம் சிக்கியிருந்தால் எமது கதி என்ன ஆகியிருக்கும்? பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது அரசின் தார்மீகக் கடமையல்லவா? அதற்கு இருக்கும் எல்லாத் தார்மீகக் கடமைகளையும் தட்டிக் கழிப்பதைப்போல இதையும் தட்டிக்கழித்திருக்கிறது. மக்களின் உயிர்களோடு தானே அதற்கு விளையாடிப் பழக்கம்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். 'செம்மணிப்படுகொலை' பற்றி 24 கவிஞர்களின் கவிதைகளடங்கிய கவிதைத் தொகுதி ஒன்று 'செம்மணி' என்ற பெயரில் வெளியாகியிருக்கின்றது. இது பற்றி நீ கேள்விப்பட்டாயா? செம்மணிப் புதைகுழிகள் இன்று உலகறிந்த செய்தியாகிவிட்டன. இதன் துயரமும் கண்ணீரும் ஆறாத வேதனையும் இத் தொகுப்பின் மூலம் மீண்டும் ஞாபகப்படுத்தப்படுகிறது.

'புலிகளின் குரலின்' பட்டம் ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் முகமாக 'வானோசை 08' நிகழ்வை புலிகளின் குரல் நிறுவனம் முள்ளியவளையில் நடாத்தியுள்ளது. கலைஞர்களின் பங்களிப்பைக் கௌரவித்து பரிசளிப்பு நிகழ்வுகளும் பட்டிமன்றங்களும் நடந்துள்ளன. காலத்தையும் சூழலையும் பதிவு செய்து, இந்தச் சூழலோடு இணைந்து வாழும் கலைஞர்களை கௌரவிப்பதென்பது சந்தோசிக்கத்தக்க விசயம் தானே.

தொடர்ந்து, இங்கே நல்ல, முறையான இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஈழநாடு தனது 41ம் ஆண்டு நிறைவைச் சுட்டும் வகையில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் வழங்கியிருக்கின்றது. இவ்வாறான போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும், ஊடகங்கள் மிகக் குறைந்த, படைப்புத் தளமற்ற பிரதேசத்தில் வாழும் எமக்கு மிகவும் அவசியமான தொன்றுதான். இவ்வாறான நிகழ்வுகள் படைப்பாளிகளினூடே நடாத்தப்படும்போது உண்மையும் நேர்மையும் படைப்புத்திறனும் உருவாகுமல்லவா?

கடந்த காலங்களைப் போல இந்த வருடத்திலும் இங்கே மாவீரர் தினம் எழுச்சியுடனும் உணர்வு பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. மாவீரர் தினத்தன்று பாடசாலையிலிருந்து மாணவர்கள் சைக்கிளிலும் லொறிகளிலும் பஸ்களிலும் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்று தீபமேற்றினார்கள், அவர்களுடன் நானும் போனேன். கிளிநொச்சி மண் இராணுவத்தினரிடமிருந்து மீட்கப்பட்ட சந்தோசத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் தமது மாவீரர்களான பிள்ளைகளின் முன் கண்ணீருடனும் கரையாத உறுதியுடனும் நின்ற காட்சி இப்போதும் கண்களுக்குள் நிழலாடுகிறது. அன்று முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இயக்கத்தின் [விடுதலைப் புலிகளின்] விமானங்கள் மாவீரர் கல்லறைகளின் மீது மலர் தூவி அஞ்சலி செய்ததாக நேசன் சொன்னான். நாங்கள் அவசியம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டிய தேவை இந்தக் காலகட்டத்தில் எழுந்துள்ளதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும்.

பானுவின் மச்சான் இராணுவத்தினரின் செல்வீச்சில் கடந்த மாதம் கொல்லப்பட்டுவிட்டான். ஏற்கனவே இரண்டு பிள்ளைகளை இழந்த அந்த குடும்பத்திற்கு இது மிகப்பெரிய இழப்பு. செத்த வீட்டிற்கும் போனோம். தாய் சகோதரர்கள் அவனுடைய பாலையதுக் குறும்புத்தனத்தைச் சொல்லி கதறும் காட்சி எங்களையும் கண்ணீர் சிந்த வைத்தது. பானுவும் எங்களுடன் சேர்ந்து அழுதுவிட்டாள். அவளது மனைவிக்கு அளவிட முடியாத துக்கம், தன் தம்பியை இழந்து விட்டேனே என்று. அவளுக்கு இது மூன்றாவது சோதர இழப்பு.

உனது காலம் எப்படிக் கழிகிறது? கடந்த காலங்களில் நாங்கள் இருவரும் விடுதலையின் வளர்ச்சிக்காகவும் வீட்டிற்காகவும் எங்களால் இயன்றவரை உழைத்தோம். இப்போது வெவ்வேறு வேலையால் பிரிந்து சென்றாலும் நாம் உறுதியுடன் இருப்போம்.

குடும்பத்தினரை மிகவும் விசாரித்ததாகக் கூறு. எனதும் எனது குடும்பத்தினரதும் சுகம் பற்றி அவர்களுக்குச் சொல்.

கடந்த 27ம் திகதியிலிருந்து ஒரு வாரமாக செஞ்சோலை சிறுவர்களுக்கான கலை இலக்கியக் கருத்தரங்கொன்றை செஞ்சோலை ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து நடாத்தியிருந்தார்கள் என்று அறிந்தேன். நல்ல முயற்சியல்லவா?

உனது நிலைப்பாடு என்னவாகிறது? புத்தகங்கள் வாசிக்கிறாயா? படிப்பு, வாசிப்பு, சமூகவேலைகள் போன்றவற்றில் இயன்றவரை உன்னை ஈடுபடுத்து, தமிழ்ப்பரிதி இன்றும் உன்னைத் தேடி வந்து செல்கிறானா? எனது அன்பைக் கூறு. கவனமாகச் செயற்படுமாறு சொல். எவ்வளவு வேலை, மனக்கஸ்ரம் இருந்தாலும் கடிதம் எழுத வேண்டும். சந்திப்போம்.

என்றும் அன்புடன்

தாக

ஜெயபுரம்

**நேரடி அறிக்கை**

# கலைஞர் குடியிருப்பில் ஒரு கூட்டுப் பண்ணை



விவசாய நிலங்களையும், ஆற்று வாய்க்கால்களையும் சிறு பற்றைக் காடுகளையும் தாண்டி எமது பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது. முடிவில் ஓர் அம்மாவிடம் விசாரித்து அந்த இடத்தை அடைந்தோம்.

காலைவேளை வித்தியாசமான அந்த இயற்கைச்சூழலும், அமைதியும் அவ்விடத்தின் அழகினை இன்னும் மெருகேற்றிக் கொண்டிருக்க நாடக மேடையில் பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் உடைகளும் இதுதான் கலைஞர் குடியிருப்பு என எமக்கு இனம் காட்டின.

உள்ளே நுழைந்து முதலாவது வீட்டில் குரல் கொடுத்தோம் யாருமில்லை. இரண்டாவது, அங்கும் யாருமில்லை.

எல்லோரும் எங்கேயன் போட்டினமோ? மனத்திற்குள் எண்ணியவாறு மூன்றாவது வீட்டிற்குப் போக ஒருவர் வந்து எம்மை விசாரித்துவிட்டு இன்னொருவரை அழைத்து வரப் போனார். அயல் வீட்டில் இருந்து நல்ல ஆர்மோனிய இசை எழுந்து காதுகளை மட்டுமல்ல, இதயத்தையும் வருடிச் சென்று கொண்டிருந்தது.

கட்டைக் காற்சட்டை, சேட், வட்டத் தொப்பி அணிந்த அவர் முகம் மலர வந்து எமை அழைத்துச் சென்றார்.

'இந்த மரத்துக்குக் கீழேதான் எங்கட கூட்டம், நாடகப்பயிற்சி, கலை நிகழ்வு எல்லாம் நடக்கிறது.' என்று கூறி அமர்ந்தார். நாங்களும் பாயில் அமர்ந்தோம்.

சுற்றிவர வெங்காயம், கத்தரி, புடோல், மிளகாய் எனப் பயிர்கள் செழிப்பாய் இருந்தன. அவர்களைப் போலவே.

'அதேன் அந்தப் பக்கம் வெட்டித் துப்பரவாக்கிறீங்கள்' நண்பன் கேட்க,

'கறிமிளகாய் வைப்பமெண்டு பாக்கிறம். இனி இந்த மாரிக்குப் பிறகுதான் கட்டைகளைக் கிழறிப் பயிர் செய்யலாம்' என்றார்.

'எல்லாருக்கும் [illegible] வேலை செய்யினம்',

'தம்பி இதொரு கூட்டுப் பண்ணை, இஞ்ச எல்லா வேலையையும் எல்லாரும் சேர்ந்துதான் செய்வம். சம்பளம் எண்டு எதுவுமில்லை. எல்லாரும் கஸ்ரப்படுகிறம், எல்லாரும் அதன் பயனை அனுபவிக்கிறம்'.

'அப்ப சமையல் சாப்பாடு'

எல்லாம் ஒண்டாத்தான்.

எமக்கு வியப்பாக இருந்தது. எங்க மிச்சம் பிடிச்சு தான் பெரிய பணக்காரனாக வரலாமெண்டு நினைக்கிற சனக்கூட்டத்துக்க இப்படியும் ஒற்றுமையா வாழுற ஒரு மக்கள் குழு இருக்குதே!

'எப்ப தொடக்கம் இப்படி இருக்கிறீங்கள்' ஆர்வம் மேலிடக் கேட்டோம்.

அந்தக்காலம் தொடக்கம் மார்க்சிச கலைவுகளுடனேயே வாழ்ந்த நாங்கள் 1983 வரை கொள்கை பிடிப்பு அது இது எண்டு தான் இருந்தம் இந்த நேரத்தில் பிரச்சினைப் பக்கம் பாக்காமல் இருந்தது பெரிய குறைதான். 83 ற்குப் பிறகுதான் நாங்கள் இதில கவனமெடுத்து சிலரோட முரண்பட்டுக் கொள்ளவேண்டி வந்தது. இந்தக்காலப் பகுதியில் அரசியல் சார்பு நிலையற்ற ஒரு கிராமிய உழைப்பாளர் சங்கத்தையும் தொடங்கி செயற்படுத்திவந்தம். பிறகு யாழ்ப்பாணத்திலையும் இதேமாதிரி ஒரு கூட்டுப் பண்ணை தொடங்கிச்சு. இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்து ஓட்டுசுட்டானிலையும், அதற்குப்பிறகு ஜெயசுக்குறுவால இடம்பெயர்ந்து இப்ப இஞ்சையும் அதே கூட்டுப் பண்ணையை அமைத்து செயற்படுகிறம் என்று கூறி மூக்குக் கண்ணாடியை முகத்தில் கொழுவினார். அருகில் இருந்த ஏனைய பலரும் அந்த வரலாறுகளைச் சுவைபடக் கூறினார்கள்.

உண்மையிலேயே பண்ணையின் சகல பணிகளிலும் சகலரும் ஒன்றிச் செயற்பட்டாலே ஓர் ஒற்றுமை வரும் வெற்றியை தரும் என்பதை பல உதாரணங்களுடனும் நகைச்சுவை உணர்வுடனும் கூறினார்.

'சரி உங்கட பண்ணை எப்பிடி இவ்வளவு உறுதியாகவும் ஒற்றுமையாகவும் செயற்பட்டு இன்றுவரை வாழ முடிகின்றது'.

எங்கட பண்ணையில எல்லாரும் ஒற்றுமையாக இருக்கிறம். ஏற்றத் தாழ்வு என்றது இஞ்சை இல்லை. எல்லாரும் சேர்ந்து ஒண்டா உழைக்கிறம். சாதிமதபேதம் இல்லை சந்தோசமாயிருக்கிறம். ஒருத்தரின்ர துன்பத்தில இன்னொருத்தர் பங்கெ

**தி.அ.றொபேட்**
**முல்லைக்கமல்**

டுக்கினம். சுருக்கமாச் சொல்லுறதெண்டால் கூட்டு வாழ்வின் தேவையை, உண்மையான வாழ்வு எது என்பதை, இவர்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். இதனால் தான் எமது பண்ணை வாழ்கிறது.

சகல மக்களையும் இப்படியான கூட்டு வாழ்வு மனப் பக்குவத்திற்கு கொண்டுவர முடியும் எண்டு நினைக்கிறீங்களோ?

நிச்சயமாய் முடியும். மக்கள் அனைவரையும் இந்த நிலைக்குள் கொண்டுவர வேணும். அப்பத்தான் உண்மையான சமு



தாயப்பற்று வரும். சமுதாயப்பற்றுக்குத்தான் நாட்டுப் பற்றைக் கொண்டுவரும். விடுதலை என்பது தனிமனிதத் தேடல், தனிமனித உற்பத்தியைப் என்ற நிலை மாறி சமூக உற்பத்தியைப் என்கிற நிலை வரவேணும்.

தனிமனித மனோபாவம் என்பது கூடாது. கூட்டு மனோ பாவம் வரவேணும். இதற்கு செம்முறை ரீதியாக செயற்பட வேண்டும். இதன் ஒரு கட்டமே எமது கூட்டுப் பண்ணை. மண்ணை மீட்பது மட்டுமல்ல, மீட்ட மண்ணில் உண்மையான விடுதலையான வாழ்வை மக்கள் வாழவேணும் உண்மையான வாழ்வு கூட்டு வாழ்வுதான். இதை அனைவரும் உணரவேணும். இந்தப் பண்ணையில் அப்படியான ஒரு வாழ்வு நடக்கிறது. இந்த நேரத்தில் நான் செத்தாக்கூடச் சந்தோசம்தான். ஏனெண்டா விடுதலை பெற்ற ஒரு சமுதாயத்தில் வாழ்கிற உணர்வும் சந்தோசமும் எனக்கிருக்கு என்று கூறிய பாலா மாஸ்ரர் அவர்கள் எழுந்து எம்மை அழைத்துச் சென்றார்.

நடந்தவாறே கதைத்தோம். கலைஞர் என்ற ரீதியில் இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

நான் கலைஞனில்லை அப்பிடிச் சொல்லுறதை விரும்புறதும் இல்லை. நான் ஒரு சமூகவியலாளன் கலைஞனாக நின்று சமூகத்தைப் பார்க்கிறதைவிட சமூகத்தில் இருந்தே அதைப் பார்ப்பது சிறந்ததென நினைக்கிறேன். கலைஞர்கள் செய்தி சொல்பவர்கள். எனவே சொல்கிற செய்திக்கேற்ப அவர்களும் ஒழுங்காக வாழவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனால்தான் நாம் செம்முறை ரீதியாக வாழ்ந்து எம் கருத்துக்களை முன்வைக்கிறோம்.

நீங்கள் இப்பிடி கூட்டாக வாழ்வது மக்கள் மத்தியில் பெரிதாக தெரியவில்லையே.

எமக்கு விளம்பரம் தேவையில்லை. இப்பிடி இருக்கிறதேபோதும். [illegible] இடத்திற்குப் பயிசிறி இறைப்பதைவிட சிறிய [illegible] சிறந்ததெல்லே. என்று அருகில் வந்து மற்றொருவர் கூற சிரித்துக் கொண்டே ஒரு வீட்டின் உள்ளே அமர்ந்தோம்.

இங்குள்ள சிறுவர்களின் முன்னேற்றம் எப்பிடி இருக்கிறது என்று வினவியபோது.

ஆரோக்கியமானதாக தான் இருக்கு. அதிகாலை 4.00 மணிக்கு எழும்பி படிப்பு. 8.00 மணிக்கு உடற்பயிற்சி பிறகு சொந்த வேலைக்குப் போய் படித்துவிட்டு வருவார்கள். மாலையில் சிறுவர் இங்கு படித்த இளைஞர் யுவதிகள்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதைவிட வெள்ளிக்கிழமைகளில் தாங்களே தயாரித்து, தாங்களே நடித்து நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் என்று செய்கிறார்கள். இதில் பெரியவர்களின் எதுவித தலையீடும் இருக்காது. இவையனைவற்றையும் பார்த்து பெற்றவர்கள் மிக மகிழ்வார்கள். நீங்களும் ஒரு நாளைக்கு வந்து பாருங்கோ என்றார்கள். நிச்சயம் என்றோம் நாம்.

உங்களுக்கு இண்டைக்கு மத்தியானச் சாப்பாடு இஞ்சதான் என்றார்கள் அன்பாக அனைவரும்.

ஐயோ நீங்கள் தந்த பாலே இன்னும் செமிக்கேல்லை என்னெண்டு சாப்பிடுகிறது என்று நண்பன் சிரித்துக் கொண்டே சொன்னது எனக்கு வயித்தெரிச்சலாக இருந்தது. எப்ப விடப்போகினம் எண்டு நான் இருந்தன் இவன் என்னடாவெண்டால். மனதுக்குள் திட்டித் தீர்த்தேன்.

நாங்கள் ஒருக்காச் சுத்திப் பார்க்கப் போறம் என்று கூறி எழுந்து கூட்டுச் சமையல் நடைபெறும் இடத்துக்குச் சென்றோம். இன்முகத்துடன் கதைத்தார்கள்.

நிவாரணம் வெட்டினப் பிறகுதான் இப்பிடி எல்லாரும் ஒண்டாச் சமைக்க வெளிக்கிட்டனாங்கள். பேந்தெல்லே தெரிஞ்சுது கொண்டாட்டம்தான் என்றோம் நாம். கலகலவெனச் சிரித்தார்கள். அதேபோல் கதைவிலும். அப்படியே சுற்றித் தோட்டங்களையும் பார்த்துக் கொண்டு, வேலையில் மூச்சாய் ஈடுபட்டிருந்த அந்தக் கலைஞர்களுடனும் உரையாடினோம்.

இந்த ஒரு கிணறுதானே தண்ணீருக்கு. இது தோட்டத்துக்கு மட்டுந்தான். மொத்தமாக நாலுகிணறு எல்லாருமாச் சேர்ந்து வெட்டியிருக்கிறம். அது சரி ஏன் இந்தத் தொங்கல் கட்டுக்க வந்து இருக்கிறீர்கள் என்று கேட்க இஞ்ச குளம் பக்கத்தில அதால தண்ணி வந்தது என்றார்கள்.

மீண்டும் அவர்களுடன் வீட்டிற்குள் சென்றோம். [illegible] சாப்பாடு தயார் சாப்பிடுங்கோ என்றார்கள். உண்மையிலேயே அந்த மாதிரி நெடுக வந்து சாப்பிட்டு போகலாம் போல கிடந்திச்சு.

அங்கிருந்த அனைவரிடமும் இந்தப் பண்ணையின் வெற்றி என்ன என்று கேட்டோம். நிறையச் சொன்னார்கள். ஒருவர் சொன்னார் இங்கிருந்து யாராவது வெளியிடங்களுக்குப் போனால் உடனேயே திரும்பி ஓடிவந்துவிடுவார்கள். [illegible] விட்டு பிரிந்து அவர்களால் வாழ முடியாது. இது தான் நாம் பெற்ற வெற்றி என்றார் மகிழ்வுடன்.

உண்மை தான் சில மணித்தியாலங்கள் மட்டுமே அவர்களுடன் பழகிய எங்களுக்கே அவர்களை விட்டுப்பிரிய மனமில்லாது இருந்தது. 12 குடும்பங்களைச் சேர்ந்த 50ற்கு மேற்பட்டோர் வாழும் அந்தக் கூட்டுப் பண்ணை ஓர் பெண் போராளியின் பெயரை தாங்கி நின்றது.

இவர்களைப் போலவே சகலரும் ஒன்று சேர மாட்டார்களா என்கிற ஆவலுடனும் அவர்களது அன்புடனும் அந்தச் சுதந்திர பூமியைவிட்டு விடை பெற்றோம்.

### அமெரிக்க தமிழ் மாணவன் அருஜ்னன் எதிர்விரசிங்கத்தின் தமிழீழ பயண அனுபவம்

# வன்னியில் மக்கள் அஞ்சாது வாழ்கின்றார்கள்



* எங்களை மறந்து விடாதீர்கள் என்ற தமிழீழ இளம் நெஞ்சங்களின் நெஞ்சை உருக்கும் வேண்டுகோளைச் சுமந்து வந்தான்
* தங்களை விடுதலைப் புலிகள் ஆள்வதையே தமிழீழ மக்கள் விரும்புவதை- அவர்கள் ஆட்சியில் மக்கள் மகிழ்ந்ததை-மகிழ்வதை தெரிந்து வந்தான்
* சந்திரிகாவால் இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்க்கு அச்சமே வாழ்வாக்கப்பட்டுள்ள பரிதாப நிலை கண்டு கலங்கி வந்தான்

நான் அமெரிக்காவில் வளர்ந்த இரண்டாம் தலைமுறைத் தமிழன். எனக்கு யுத்தத்தை குறித்து எந்த தனிப்பட்ட அனுபவமும் இல்லை. எனக்குத் தமிழ் மக்களைப் பற்றித் தெரிந்தவை எல்லாம் நான் பத்திரிகைகளிலும் உறவினர்களிடமும் இருந்து அறிந்து கொண்ட அச்சம் தரும் யுத்தச் செய்திகள் மட்டுமே. இந்த யுத்தமும் மக்கள் துன்பங்களும் எங்களில் இருந்து எவ்வளவோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நடந்து கொண்டிருப்பதால் இளம் தலைமுறையினராகிய எமக்கு இவைகள் பற்றி அதிகம் தெரியாத காரணத்தால் புலம்பெயர் தமிழ்ச் சமூகமாகிய எம்மிடை இவை குறித்து அதிக தாக்கம் சிந்தனை இருப்பதில்லை. ஆனாலும் எமது நாளாந்த வேலை தேடல் படலங்கள் கல்விப் படிப்புக்கள் தொழில்கள் இவற்றுக்கு இடையிலும் எமது தமிழ் மக்களுக்கு அங்கு நடைபெறும் கொடுமைகள் குறித்த செய்திகளைப் பத்திரிகைகள் தொலைக்காட்சிகளில் நாம் பார்க்கும் பொழுது எமது உள்ளம் ஏதோ ஒரு வகைக் குற்ற உணர்வில் குறுகுறுக்கும். தமிழ் மக்களைப் பற்றியும் அவர்களது நிலைமைகள் குறித்தும் அதிகம் அதிகம் அறிவதற்கு மனம் துடிக்கும். ஆனாலும் ஆயிரக்கணக்கான மைல்கள் எம்மைப் பிரித்து நிற்கும் நிலையில் நாம் என்ன செய்ய முடியும். அந்த உயர்வான கலை கலாச்சார மரபுகளிலிருந்து நாமும் நம் சந்ததியும் மெதுவாக மெதுவாகத் தூரத் தூர விலகி இறுதியில் அவற்றை காலதிகாலத்தில் எம் குழந்தைகள் முற்றாக இழந்து விட அனுமதிக்கலாமா? நம்மையும் அவர்களையும் பிரித்து நிற்கும் இந்தத் தூரத்தைக் கடந்து அவர்களுடன் ஒருசில காலங்களுக்காவது இணைந்து வாழ்ந்தால் தான் அவர்களை நாம் புரிந்து கொள்ள முடியும் நம்மை நாம் தெரிந்து கொள்ள முடியும் அனைத்தும் அறுந்து போகாது இணைத்துக் கொள்ள இயலும் என்ற உணர்வு தந்த வேகத்தில் என் தந்தையுடன் இலங்கைத்தீவுக்குச் சென்று அங்கு ஆறுமாதங்கள் செலவிட்டேன்.

## அச்சத்துடன் வாழும் தமிழர்கள்

நான் கொழும்பிலும் சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் தங்கியிருந்தேன். இதனால் தமிழ் மக்களின் எல்லா நிலையான வாழ்க்கையையும் தெரிந்து கொள்ள முடிந்தது. என்னைப் பொறுத்தமட்டில் கொழும்பிலும் சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்குடா நாட்டிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் இனங்காணக் கூடிய அச்சத்தையே தங்கள் வாழ்வாக கொண்டு வாழ்கின்றனர். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் விசாரணைகள் ஏதுமற்ற மனித உரிமை மீறல்கள் காரணமாக மக்கள் இந்த அச்ச நிலைக்கு உள்ளாகி வாழ்கின்றனர். கொழும்பில் தமிழ்ப் பெண்கள் நெற்றியில் திலகமிடுவது தங்களை தமிழர் என இனஅடையாளம் காட்டும் என்னும் அச்சத்தில் தங்களது நீண்ட கால கலாச்சாரத் தன்மையைக் கூட இழந்து பொட்டற்ற நெற்றியுடன் காணப்படுகின்றனர். காரணமற்ற கைதுகளும் சுற்றி வளைப்புக்களும் சாவடிச் சோதனைகளும் கொழும்பில் தமிழர்களை இன அடையாளங்களை ஒழித்து மறைத்து வாழும் அச்ச வாழ்வுக்குத் தள்ளியுள்ளது. தமிழில் கதைத்துக்கொண்டு செல்லும் ஒருவர் சோதனைச் சாவடிகளில் மிக நீண்ட சோதனைகளுக்கும் பல தடவைகளில் தண்டனைகளுக்கும் ஆளாகி இன்னலுற வேண்டி நேரிடுவதைக் காணக் கூடியதாக இருந்தது. வவுனியாப் பகுதியிலும்





இந்த நிலை தான். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைத்த சில தமிழ் மாணவர்களும் கூட சுதந்திரமாக நடமாடுவதற்கு உள்ள அச்சம் காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு செல்லாமல் இருப்பதைத் தெரிந்து கொண்டேன்.

## இளம் மாணவியின் கன்னத்தில் பளார் என அறை<br>விடுதலைப் புலிகளின் ஆட்சியை நினைத்து ஏங்குகின்றனர்

யாழ்குடாவில் திரும்பிய இடமெல்லாம் கண்களில் படுவது இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள் தான். ஒரு தமிழ்



மாணவியை இராணுவத்தினன் ஒருவன் பளார் எனக் கன்னத்தில் அறைந்தான். இத்தனைக்கும் அந்த தமிழ் மாணவி செய்த குற்றம் சற்றுத் தாமதமாக தனது அடையாள அட்டையை தனது பேர்ஸை விட்டு எடுத்துக் காண்பித்தமையே ஆகும். யாழ்ப்பாணத்தில் உள்ள படையினரில் 99.99 வீதமானவர்கள் சிங்களவர்கள். அவர்களால் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ உரையாடவோ விடயங்களை விளங்கிக் கொள்ளவோ முடியாது.

இந்தச் சோதனைச் சாவடிகள் எல்லாமே தமிழர்களை அடித்து சித்திரவதை செய்து சில நேரங்களில் கொன்று அழிக்கும் நிலையங்களாகவே உள்ளன. இந்தச்சோதனைச் சாவடிகளைத் தாண்டும் எல்லா வயதுப் பெண்களுமே பாலியல் வன்முறைகளுக்கும் இனக்கொலைக்கும் எந்நேரத்தில் தாங்கள் ஆளாவார்கள் எனத் தெரியாத பேரச்ச உணர்வுடனேயே காணப்படுகின்றனர். சிறீலங்கா படைகளைக் கொண்டே தங்கள் பிரதேசங்களில் தனது ஆட்சியை நடாத்துவதாக கூறும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆட்சியில் தாங்கள் அனுபவித்த சுதந்திரத்தை நீதி நேர்மையான ஆட்சியினை பாதுகாப்பை எண்ணிப் பார்த்து ஏங்குகின்றனர். தங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி மீளவும் வரும் என்னும் நம்பிக்கையே இவர்களில் பலரின் எதிர்காலம் மீதான நம்பிக்கையாக உள்ளது.

## போகும் பொழுது காடு, வரும் பொழுது சிங்களக் குடியேற்றம்

திருகோணமலைப் பிரதேசத்தில் நான் முதல் தடவை பயணம் செய்த பொழுது அடர்ந்த காடுகளாக காணப்பட்ட பிரதேசங்கள் சில, சில மாதகால இடைவெளியில் புல்டோசர்கள் கொண்டு அழிக்கப்பட்டு சிறு சிறு கடைகள் வீடுகளுடன் சிங்களக்குடியேற்ற நகரங்களாக மாற்றப்பட்டிருந்ததை மறுதடவை பிரயாணம் செய்யும் பொழுது கண்டு நான் திகைத்து விட்டேன். இவ்வாறு உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களில் எல்லாமே சிங்களத்தில் எழுதி வைக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. என்னைச் சந்தித்த பல்கலைக் கழக மாணவர் ஒருவர் இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் ஜேர்மன் படைகள் பிரான்சில் கைக்கூலிகளின் துணையுடன் நடாத்திய இராணுவ ஆட்சியையும் தற்போது சிறீலங்கா நடாத்தி வரும் இராணுவ ஆட்சியையும் ஒப்பிட்டு பேசினார்.

## வன்னியில் சுதந்திரக் காற்றில் மக்கள் மனம் மகிழ் வாழ்க்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசம் தமிழ் மக்களின் சுதந்திரவாழ்வின் பூமியாக காட்சியளிக்கின்றது. அங்கு தான் தமிழ் மக்கள் அச்ச உணர்வு அற்றவர்களாக மனநிறைவுடன் வாழ்கின்றனர். இவர்களின் இந்த அமைதியான வாழ்வுக்கு சிறீலங்காவின் குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் சிறீலங்கா விதித்துள்ள பொருளாதார உணவு மருந்து தடைகளால் ஏற்படுத்தப்படும் தாங்கொணா இன்னல்களுமே ஊறுவிளைவிக்கின்றன. இவைகளைக் கூட கண்டு அஞ்சாத மன உறுதியுடன் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதில் பெருமகிழ்வடைகின்றனர். இதனால் அந்த வன்னிப் பிரதேசத்தில் நீண்ட காலம் வாழ்வதையே நானும் விரும்பி இரண்டு தடவைகள் அங்கு சென்று அந்த சுதந்திர மனிதர்களுடன் வாழ்ந்து மகிழ்ந்தேன்.

மல்லாவி மத்திய கல்லூரி இரசாயன ஆய்வு கூடத் தரையில் படுத்திருந்த அந்த நாட்களை இப்பொழுது எண்ணிப் பார்க்கின்றேன். குளிரும் கொங்கிரீட் நிலத்தில் நான் தூக்கமின்றி கிடப்பேன். சிறீலங்கா அரசாங்கம் ஐந்து மைல்களுக்கு அப்பால் உள்ள மாங்குளம் முகாமிலிருந்து தமிழ் மக்கள் மேல் கொட்டும் எறிகணைவீச்சுக்களின் சப்தம் அருகில் கேட்பதுபோல கேட்டுக் கொண்டிருக்கும். இவை எதையும் பொருட்படுத்தாமல் அந்த அறையில் அடைந்தபடி படுத்திருந்த சுமார் 20 பேரும் தூங்குவார்கள். இன அழிப்புக்கள், இன ஒதுக்கல்கள், பாலியல் வன்முறைக் கொடுமைகள், எறிகணைகள், குண்டுவீச்சுக்கள் என எத்தனையோ வகையான கொடுமைகளுக்கு சிறீலங்காவால் உள்ளாக்கப்பட்டு வரும் தமிழ் மக்கள் இவ்வளவு தூரத்திற்கு இத்தகைய சூழ்நிலைகளுக்கு பழக்கப்பட்டு அவர்கள் மனது விரக்தியின் எல்லையில் வைரமாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்டேன். இனியும் அச்சப்பட்டவர்களாக வாழ அவர்கள் ஆயத்தமில்லை. ஆனாலும் சிறீலங்கா இவர்களை விட்டு வைப்பதாக இல்லை. உணவு மருந்து கூட போதிய அளவுக்கு வழங்கப்படாத இல்லாதின் மக்களாக இவர்களை சிறீலங்கா வாட்டி வதைக்கின்றது.

இவர்களில் பலர் எட்டு ஒன்பது தடவைகள் கூட இடம்பெயர்ந்துள்ளனர். 10 சதுர அடி உள்ள தற்காலிக குடியிருப்புக்களிலே 6 முதல் 8 பேர் வரை இவர்களில் பலர் வாழ்கின்றனர். ஆனாலும் வன்னியில் ஊரடங்குச் சட்டமோ அல்லது வேறெந்த தடைகளோ இவர்களின் சுதந்திரத்திற்கு இல்லை. நள்ளிரவு தாண்டும் வரை சுதந்திரமாக சுற்றித்திரியலாம். காலாற நடந்து மகிழலாம். சின்ன சின்ன தேநீர் கடைகளில் கூடியிருந்து தேநீர் குடித்து மகிழலாம். பாட்டுக்கள் பாடியும் நடனங்கள் ஆடியும் மகிழ்ந்து சிரிக்கலாம். எனக்குத் தமிழ் படிப்பிக்க அவர்கள் முயன்றதும் நான் எனக்கு தெரிந்த அளவில் வார்த்தைகளை உச்சரிக்க அவர்கள் சிரித்து மகிழ்வு



தும் எல்லாமே ஆனந்த மயமான உணர்வுகள். நான் எனக்கு தெரிந்த ஆங்கிலப் பாடல்களைப் பாடி அவர்களை மகிழ்வித்தேன். அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் ரேசன் உணவில் இவர்கள் தங்கி வாழ்கின்றனர். இதைத் தவிர இவர்களுக்கு வேறு எந்த ஆதாரமும் கிடையாது.

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

# கூடு திரும்பும் மகிழ்வில் ஒரு குருவி



நீண்டநாள் காணாத பிள்ளையை தரிசித்த தாயின் மகிழ்வு. சௌந்தர்யங்கள் வியாபித்துக் கிடக்கும் வானத்தில் ஏறிப்பறக்கும் பரவசம். சமுத்திர ஆழத்துள் மூழ்கி முத்தெடுத்து வந்த பெருமிதம், இவை எல்லாம் கலந்த உணர்வு எம்முள் எழுச்சியுறுகிறது. கால்கள் நிலத்தில் பாவாது ஆனந்தத் தாண்டவத்தில் தாவுகின்ற நிலை எதனால் விளைந்தது?

-நேற்று வரை எம்முள் மூசிப்படர்ந்த விரக்தியை, கரங்களை விரித்து நீட்ட முடியாது முட்டிக் தடுத்த இடர் மனையை, கால்களைக் கீழே பதிக்க முடியாது குத்திக் குருதி கசிவித்த முட்களினைத் துடைத்தெறிந்து விட்டு உடலின் இயல்பாயமைந்த நடையின் லாவகத்துக்கு வழி வகுத்தமையால்.

-எம் உணர்வின் உறைவிடமாய் உறுதியின் பலமாய் பரவியிருந்த கல்லறை நிலத்தை.... தானியங்கள் விளைகின்ற மண்ணை, ஆலயங்களின் கோபுரங்கள் வானை உரசுகின்ற இடத்தை புலிகள் மீட்டெடுத்துத் தந்தமையால்.

-இந்த மீட்பினால் உச்சந்தலையில் விழுந்து பிளக்க வைக்கும் தேங்காய்களின் விலையை.... அயலோரக் கிராமங்களில் அழகொளிர நிறங்காட்டும் பச்சை வயல்கள் விளையாது கருகும் துயரத்தை, காணகத்து மேடுகளில் கற்றிவர வாரடித்து ஓடும் கார்கால நீரோட்டத்தில் நெளியும் சர்ப்பங்களைக் கண்டடையும் கிலியதனை எண்ணி இனி அஞ்ச வேண்டியதில்லையென்றும் ஆசுவாசமும் அகமகிழ்வும் ஆர்ப்பரித்தெழுகிறது. எதிரியால் எம் தலைமீது ஏற்கப்படாமலே கட்டி விடப்பட்ட வறுமையின் பிடியில் நசுங்கிச் சாவடைய விரும்பாத ஏழ்மையின் வடிவங்கள், சிறு ஒளியைத்தேடி அவன் கூட்டுக்குள் நகர்ந்து அதல பாதாளத்துள் விழுந்த எலும்புகளோடும் அடையாளம் காட்டும் சிறுநிறத் துண்டுகளோடும் நீண்ட நாட்களின் பின்னால் மீட்கப்படும் சனம் இனியில்லை. என்ற இன்பலாகிரியில் புலிக்கொடியை உயரப்பறக்க விடும் பொழுதை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தேன்.

துயரம் நிரம்பிய இரண்டாண்டுகளின் பின்னால் காந்திக்கிராம எல்லையை தாண்டும் போது, மீண்டுமொரு சூரியனைக் கண்கள் காணும் உணர்வு. வீதிகளின் இரு புறங்களும் ஒடுங்கி தெரு சிறுத்துப் போயிருந்தது. நீண்ட தொலைவுக்கு விழிகளை வீசும்போது தெருவை மூடி பற்றைகள் அடர்ந்திருப்பதாய், இடிபாடுகள் நிறைந்த தொன்மையான நாகரிக காலமொன்றை நோக்கி அகழ்வாராய்வு செய்து கொண்டு போவதாய்த் தோன்றிற்று. முறிப்பை நெருங்கும் முன்னர் வருமொரு வளைவில் குறுக்கே கிடந்த [illegible] பன்னித்தாக்கை கண்ணுற்ற போது குளிர்ச்சி நிறைந்த பசுமையான நீரோட்ட கால நினைவுகள் நெஞ்ச ஊற்றுக்களில் பீறிட்டுக் கிளம்பின.

புதுமுறிப்பு அணைக்கட்டில் சைக்கிளை ஊன்றி மிதித்தேன். சாம்பை நோக்கி ஏறுகையில் கடந்த காலங்களில் 'செயின்' கழன்று போக பின்புறமாய்ப் போய் விழ எத்தனிக்கையில் தவிதவித்து தாவிப்பாய்ந்திறங்கிய நிகழ்வுகளை நினைத்துக் கொண்டேன். அணைக்கட்டு வளைந்து நீண்டிருந்தது. குளநீருக்கப்பால் காத்திருக்கும் காடுகள் மேல் விழிகளை வீசினேன். எந்தத் தொலைவில் நின்றாலும் முடி தெரியும் தொலைத் தொடர்பு கோபுரத்தைத் தேடினேன். கண்களுக்குக் கிடைக்கவேயில்லை. குளநீரைத் தழுவி வரும் சீதளக் காற்று ஆழ்ந்த சோகத்தோடு முகத்திலறைந்தது. அணைக்கட்டு முடிவில் முழங்கை வளைவாய் சாலை திரும்பிற்று பாதையின் நடுவே மரமொன்றின் கருமை படர்ந்த அடிக்குற்றி இன்னும் அப்படியே கிடந்து அன்றைய கால வாழ்க்கையைச் சொல்லிக் கொண்டிருந்தது.

**ப. தயாளன்**

சேவியர் கடையை நோக்கி சைக்கிள் விரைகின்றது. சாலோம் நகர் பாவர் பராமரிப்பு நிலையமும் அருகே இடி தாங்கியும் எத்தனையோ வேதனைகளைத் தாங்கிய கவடுகளோடு நின்றன. பனைவோலை வெட்டப்போன சிறிலதுவை போதகரை பேய்கள் வெட்டிப் போட்ட இடம் இது. என்ற ஞாபகமும் சடுதியாய் எழுந்து அர்த்தப்படுத்தியது.

'போதகரை வெட்டிப் போட்டு ஆமி போன அரைமணித்தியாலத்தில இடத்தால போனனான். எனக்கொண்டும் தெரியாது' என அருகே வந்த நடுத்தர வயது மனிதர் இன்னொருவருக்குக் கூறிக்கொண்டு வந்தார்.

நீளும் தெருவின் இரு புறமும் நீர் வாரடித்தோடி கிறவல் தரை அரிபட்டுக் கிடந்தது. சாம்பலான வீதி. சைக்கிள் குதிரை வேகம் காட்டியது. பாதிரியார் கொலையுண்ட இடத்திலிருந்து 250 மீற்றர் தூரத்தில் இடப்புறமாய் ஊடறுத்து போகுமொரு சிறுதெரு. அதன் முன் பிரதான கிறவல் வீதியை அண்மியதாய் முக்கோண வடிவ நினைவு கூடம், மஞ்சள் நிறம் வெளிறிப்போயிருந்தது. சைக்கிளின் குறுக்காய் மெலிந்த கரிய உடலொன்று [illegible] இடப்புறமாய்க் கடந்தது. அவ் வேகத்தில் வேலியில் படர்ந்திருந்த கறையான் மண் சொரிந்து ஒவ்வொரு [illegible] கண்கள் மிக அவசரப்பட்டன. நெருங்கியது. வேகம் பிடித்திருந்த சைக்கிள் சில்லை குதிக்காலால் தெரித்துத் தணித்தேன். கல்லறைக் குக்கிடையே புண்டுகள் உயர்ந்திருந்தன. பசுமை வழிய சிவப்பு நிறங்களில் மலர்ந்த செவ்வரத்தை வெண்மையில் வாடி மஞ்சள் படர்ந்த இலைகளோடு தொங்கின. வாசலில் பொம்பலகை சரிந்திருந்தது. 'சின்ன ஆசுவாசம் என்னுள், கல்லறைகள் அப்படியே இருக்கின்றன. தொண்ணூற்றேழாம் ஆண்டின் நவம்பர் இருபத்தியேழு கண்ணுள் விரிந்தது. அந்த வேளையிலும் கல்லறைகள் முன் சுடர்கள் ஒளிர்ந்தன. இந்த ஆண்டும் மீண்டும் உறவுகளின் முன் நின்று உருகி உறுதி கொள்ளும் காலம் வந்திற்று என எண்ணியபோதே நினைவு ஒலி காதில் கேட்பதான பிரமை.



தூரிலும் இங்கிருந்து சேவியர் கடை நோக்கி திரும்பும் சந்தி. வலப்புறமிருந்த பிள்ளையாரின் வாழிடம் அழியாத கொடூரச் சுவடுகளைத் தாங்கியிருந்தது. முதுகுப் புறமாய் அணைந்து நின்ற தெடிய மரம் கிளை பிளந்து சாய்ந்திருந்தது.

வலப்புறமாய் ஒரு வளவில் மாமரங்கள் காய்கள் நிறைந்து பசுமை காட்டியது. இப்போதைக்கு அவை குரங்குகளின் வாய்களிற்கு மாத்திரமே என எண்ணியபோது மனதில் பரவும் மகிழ்வலையின் வேகம் விரைவு படர்ந்தது. அவசரப்பட்டு வாழ்நிலம் போனவர்கள் வந்து அங்கு இருந்து காய்களை தொலைக்கலாம். அதன் எதிரே உள்ள நிலத்தில் உயர வளர்ந்திருந்த பற்றைகளுக்கிடையில் இடப்புறமாய் தலை சாய்த்திருக்கும் பேசு நாதரின் தூரிகொன்று முகத்தில் தூசம் நிரம்பி வழிய தெருவையே பார்த்துக் கொண்டிருந்தது.

*(மிகுதி அடுத்த வாரம்)*

# போர் எழுச்சிகொள்



சந்திரிகா தமிழீழத் தாயகத்தின் மீதும் தமிழர்கள் மேலும் தொடுத்து வரும் மக்கள் மீதான யுத்தம் தமிழீழத் தாயகத்தில் மக்களனைவரையும் அடக்குமுறைக்கு எதிராக பேரெழுச்சி கொள்ள வைத்துள்ளது.

இந்தப் பேரெழுச்சி உணர்வால் தமிழீழ விடுதலைப் போராட்டம் மாபெரும் மக்கள் போரெழுச்சியாக மாறி வருவதை, சமீப காலமாக மக்கள் தமிழீழத் தாயகத்தில் சூழ்ந்துநிற்கும் எதிரிக்கு எதிராக நடாத்தி வரும் பேரணிகளும் கூட்டங்களும் உலகிற்கு தெட்டத் தெளிவாக்கி வருகின்றது. இந்த தமிழீழ மக்கள் போரெழுச்சி உலகெல்லாம் பரந்துவாழும் தமிழீழப் புலம்பெயர் தமிழீழ மக்களிடையிலும் என்றுமில்லாத அளவுக்கு பேரெழுச்சிகளை ஏற்படுத்தி வருவதை டென்மார்கில் பேரணியாகவும், இலண்டன், கனடா போன்ற நாடுகளில் மகா நாடுகளாகவும் புலம்பெயர் தமிழீழ மக்கள் நடாத்திய வரலாற்றுப் பெருமைமிகு தேசிய ஒன்று கூடல்கள் உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன.

இந்நேரத்தில் 'களத்தில்' சார்பாக தமிழீழத்திலும், தமிழீழ மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மக்கள் கொண்ட போரெழுச்சிகளின், பேரெழுச்சிகளின் செய்திகளை இங்கு சுருக்கமாகத் தொகுத்து தருகின்றோம்.

உடையார்கட்டு மாணவர்கள் இரைச் சந்தை விளான் சந்தியிலிருந்து பேரணியாகப் புறப்பட்டுத் தங்கள் பாடசாலை முன்றலைச் சென்றடைந்ததும் அங்கு போரெழுச்சிக் கூட்டம் ஒன்றை உடையார்கட்டு மாணவர் தலைவர் தலைமையில் நடாத்தினர். சுதந்திரபுரம் கலிஸ்ரர் மகாவித்தியாலய மாணவர்களும் உரையாற்றிய இக்கூட்டத்தில் உடையார்கட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்மாறன், கொள்கை முன்னெடுப்புப்பிரிவைச் சேர்ந்த சிவமாறன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். மண்ணை இழந்த மாணவிகள் என்ற தெருவழி நாடகமும் இடம்பெற்றது.

கண்டிக்குளம் பகுதியிலும் போரெழுச்சி ஊர்வலங்கள் நடைபெற்றன. பேயித்தொடுவாய் கற்காடு மக்களால் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சிறீலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, கூட்டுப்படைத் தளபதி தலுவத்தை ஆகியோரது கொடும்பாவிகள் இழுத்து வரப்பட்டு கண்டிக்குளம் ஆலங்குளம் சந்தியில் வைத்து எரிக்கப்பட்டன. இப்போரெழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிறுவர்கள் "இளம் தலைமுறையே எமக்காகப் போராடுங்கள் அண்ணன்மாரே அக்காமாரே புலியாக மாறுங்கள்" எனக் கோஷமிட்டுச் சென்றமை நெஞ்சை உருக்கும் நிகழ்வாக இருந்தது என அதனைக் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். ஊர்வல முடிவில் கிராமசேவகர் திரு. செல்வராசா தலைமையில்



கூட்டம் நடைபெற்றது.

வட்டக்கச்சியில் நடந்த பொது அமைப்புக்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் இன்றைய போராட்டம் மக்கள் போராட்டமாக வலுப்பெற்று வெற்றியின் தறுவாயில் நிற்கிறது. தமிழர்களாகிய நாம் எங்கு சென்றாலும் அடிமைகளாகவும் அகதிகளாகவும் வாழும் இன்றைய நிலை நாளைய எமது சந்ததிக்கும் தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது.

இந்தச் சுமைகளையும் அவலங்களையும் ஒழித்துக்கட்ட நாம் அனைவரும் எமது காலத்தில் எம் தலைவனின் வழிகாட்டலில் தேசவிடுதலையை வென்றெடுக்க அணிதிரளவேண்டும் என அறைகூவல் விடுத்ததார்.

வன்னியில் பரவலாக நடைபெற்ற போரெழுச்சிக் கூட்டங்களை அடுத்து தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளை அடித்து விரட்டி தேசத்தை மீட்டெடுக்க பல இளைஞர்களும் இளம்பெண்களும் முதியவர்களும் போராட்டத்தில் தம்மை இணைத்து வருவதினால் தமிழீழ விடுதலைப் போராளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---




— முல்லைக் கோனேஸ் —

அன்று வழமைக்கு மாறாக கடலில் கொஞ்சம் காற்று வீசியது. மழை வருவதற்கான அறிகுறியும் வானில் கருக்கொண்டிருந்த மேகங்களில் தெரிந்தது. கடல் கறுத்துக்கொண்டு வருவதைப் பார்த்தால் மிகவேகமாக மழை இறங்கி விடப் போவதை கணிக்க முடிந்தது. படகில் வலைகள் எல்லாம் ஏற்றியாகிவிட்டது. கரையே போவதென்றால் இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் ஓடவேண்டியிருக்கும்.

காற்றுச் சுழன்றடித்தது. கடலில் உருட்டு அதிகமாக இருந்ததால் படகு அலைக்கழிந்தது.

"தம்பி! எஞ்சினை ஸ்ராட் பண்ணு போவமே கரைய போவம்"

"ஓமப்பா! நீங்கள் அணியத்துக்குப் போங்கோ"

சுழிக்கும் ஜலப் பிரளயத்தில் சுருண்டு பெருத்து உயர்ந்து பளார் என வீழ்ந்து சிதறும் அலைகளில் இருவரும் நனைந்து தொடங்கினர். தலைவழியே வழியும் தண்ணீர் நாவில் உவர்த்தது. கரையில் இருந்து வீசும் காற்றினையும் உயர்ந்து தளம்பும் அலைகளையும் எதிர்த்தவாறு வேகமாக விரைந்தது படகு.

"தம்பி! அங்க பாரடா ஆற்றையோ வள்ளம் ஒன்று அடையுது போலக்கிடக்கு" தகப்பன் காட்டிய திசையில் அவனும் பார்த்தான். அலைகளில் ஆடியவாறு படகொன்று தெரிந்தது.

"ஐயா! அது எஞ்சினோடதான் நிக்குது. ஆரும் உயர சூடை வலைக்குப் போற ஆக்களாயிருக்கும்."

"இல்லைத்தம்பி அங்கபார் வள்ளத்தில் இருந்து ஆரோ கையைக் காட்டுகினம் எஞ்சினைதும் பிழையோ தெரியாது அருகவிட்டு என்னென்டு ஒருக்காப் பார்த்திட்டுப் போவம்"

"ஐயா கடலிருக்கிற சீருக்குள்ள இப்ப நின்று மினக்கெடாது கரைய போவம்"

"இல்லைத்தம்பி [illegible]" [illegible]

அணியத்தில் பட்ட அலைகளை கிழித்தவாறு படகு விரைந்து நெருங்கியது. [illegible] எல்லாம் அந்நிய முகங்கள்.

அவர்கள் எதிர் பார்க்கவில்லை. இப்படியும் வருவார்களென.

"ஐயோ தம்பி மோசம் போனோம்"

அவர்களின் கரங்களில் இருந்த துப்பாக்கிகள் அந்த [illegible] இருட்டிலும் பளபளத்தவாறு இவர்களை நோக்கி உயர்ந்தது.

# ...நும் தமிழ்த் தேசியம்

கனடாவில் நடைபெற்ற "தமிழ்த் தேசியமும் இலங்கையில் சமாதானத்திற்கான தேடலும்" என்ற சர்வதேச மகாநாடு எதிர்பார்த்ததை விட அதிக வெற்றியளித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.



சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள் பலர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பல கோணங்களில் ஆய்வு செய்து பின்வரும் தீர்மானங்களை எடுத்தனர்.


தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான எந்த சமாதானத் தீர்வு முயற்சியும் திம்பு பேச்சுவார்த்தைகளின் நான்கு கொள்கைகளை அடிப்படையாக கொண்டு அமைதல்வேண்டும். இக் கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

தமிழ் மக்கள் தனியான வரலாற்றை, கலாச்சாரத்தை, மொழியைத் தம்அகத்தே கொண்டு கூடி வாழ்ந்து வரும் தேச இனம்.

இலங்கைத்தீவில் வரையறுக்கப்பட்ட எல்லைகள்கொண்ட தாயகத்தில் தமிழர்கள் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர்கள் பிரிக்கப்பட முடியாத சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள்.

சிங்களத் தேச இனம் தமிழ்த் தேசஇனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதின் மூலம் ஏற்படக் கூடிய நியாயமான ஏற்புடைய அரசியல் தீர்வின் மூலம் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரல்வேண்டும். தமிழர்களுக்கு உள்ள பிரிக்கப்பட முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழம் என அழைக்கப்படும் தமிழர்களின் தாயகத்தில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ள வேண்டுமென சிறீலங்கா அரசாங்கத்தைக் கோருகின்றோம். தமிழீழத்தில் வாழும் மக்களுக்கு மேலான பொருளாதாரத் தடைகளை நீக்கி தமிழீழ மக்களுக்குத் தேவையான மருத்துவம், உணவு, கல்வி மற்றும் பொருளாதாரத் தேவைகள் தங்கு தடையின்றி கிடைக்ககூடிய வகையில் எல்லாத் தடைகளையும் அகற்ற வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் எல்லோ




ரையும் விடுவித்து, சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழீழத்தின் பலபாகத்திலும் காணப்படும் தமிழர்கள் புதைக்கப்பட்டுள்ள மனிதப் புதை குழிகளை சென்று பார்வையிட்டு உரியன செய்ய அனுமதிக்க வேண்டும்.



சர்வதேச செய்தித் தகவல் சேவையாளர்கள் தமிழர் தாயகத்திற்கு சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்று நடாத்தப்படும் பேச்சுவார்த்தை மூலம் தமிழர்களும் சிங்களவர்களும் சுயமரியாதையுடன் அமைதியாக வாழக் கூடிய நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.


அத்துடன் இந்த மகாநாடு எல்லாத் தேசங்களையும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று தமிழீழ விடுதலைப் புலிகளே அவர்களது பிரதிநிதிகள் என்பதை அங்கீகரித்து சிறீலங்காவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதையும் இராணுவப் பயிற்சிகள் அளிப்பதையும் நிறுத்தி தமிழ் சிங்கள தேசிய முரண்பாட்டிற்கான தீர்வு விரைவுபடுவதற்கு உதவவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது எனவும் மகாநாட்டு மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.



இரு தினங்களாக நடைபெற்ற இம் மகாநாடு, "தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டில் பொதுமக்களின் விதி" - "முரண்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்பு உரிமைகள்" -"முரண்பாட்டு பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலைமைகள்" - "பொருளாதாரம், கல்வி, சுற்றாடல் என்பவற்றில் யுத்தம் ஏற்படுத்தும் தாக்கங்கள்" - "முரண்பாட்டின் செய்திகளை செய்தி தொடர்பு சாதனங்கள் அறிவிக்கும் தன்மைகள்" - "முரண்பாட்டிற்கான தீர்வினை ஊக்கப்படுத்தல்" என்ற ஐந்து உப அமர்வுகளில் நடைபெற்றது.



பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருக்கும் சிறீலங்காவின் இங்கிலாந்துக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரி




## விண்ணிறைந்த துயரும் விண்ணேறிச் சொல்லிய மொழியும்

அகதி மனிதனின்
வேண்டுதல்களையும்
துயர் நிறைந்த அவனது
வாழ்வினையும்
கருமை படர்ந்திருக்கின்ற
வானவெளி

தாய் மண்ணை நினைந்து
விண்ணை நோக்கிய
அவனது விழிகளும்
விண்ணை நோக்கிய
அவனது கைகளும்
விடிவிற்காகவே ஏங்குகின்றன.

அவனது
முறைப்பாடுகளால்
நிறைந்த ஆகாய வெளியை
எல்லோரும்
அசட்டை செய்கின்றார்கள்.

எமது வானம்
எம் வசமாக வேண்டும்.
எமது தாய் நிலம்
எமக்கு வேண்டும்.

பூமியில்
அலையாய் அலைகின்ற
எம்மையும்
யார்தான் கண்டனர்.

எங்களின் கதைகளை
யார்தான் கேட்கின்றார்.

ஆகாய வீதியில்
அவர்கள் வலம் வந்தனர்
உருளும் உலகின் திசை
மாற்றவேண்டியே

எங்கள்
அர்த்த வாழ்வை
சிதைத்தவரோடு ஆடாத
ஒதுக்கங்களை
ஒருபோதும் வழக்காதீர்

மாறுக தேசமும்
விடுதலை ஆகாயம் கொண்ட
கறுப்பு சூரியனை போல்
கலங்கு விழி நீர் எந்த
காலத்தை வென்று எழு
திசைகளை ஒன்றாக்கு

விண்ணிறைந்த
துயரின் மருந்தாய்
விண்ணேறிச் சொல்லிய
மொழிதானும்
யாருக்கும் புரியாது போகுமோ

—







22-05-99 அன்று மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை கலைச்செல்வன்**
**கோவிந்தன் ரவிக்குமார்**
திருகோணமலை மாவட்டம்

**வீரவேங்கை பிரசாந்தன்**
**கிருஸ்ணமூர்த்தி ஈஸ்வரன்**
திருகோணமலை மாவட்டம்

25-05-99 அன்று திருகோணமலை புல்மோட்டைக் கடற்பரப்பில் இரவு 11 மணி தொடக்கம் 26-05-99 இன்று அதிகாலை 2.30 மணி வரை இடம் பெற்ற கடற்சமரின்போது 7 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

**லெப்.கேணல் பிரசாந்**
**வில்சன் ஜெயச்சந்திரன்**
தருமபுரம் கிளிநொச்சி

**மேஜர் வண்ணன்**
**மரியதாஸ் நிமலதாஸ்**
யாழ். மாவட்டம்
த-மு. சுண்டிக்குளம் விசுவமடு

**மேஜர் நாயகன் அல்லது சுவாதி**
**சின்னத்துரை சத்தியானந்தம்**
யாழ். மாவட்டம்
த-மு. உடையார்கட்டு

**மேஜர் தேன்மொழி**
**நடேசரத்தினம் வசந்தமலர்**
காக்கைதீவு பூநகரி

**கப்டன் செந்தாரணி**
**கிறிஸ்டி அமிர்தாரணி**
யாழ். மாவட்டம்
த-மு. 2ம் வட்டாரம் இரணைப்பாளை புதுக்குடியிருப்பு

**லெப். கருணா அல்லது அன்புக்கொடி**
**ராசநாயகம் ஜெகதீஸ்வரி**
யாழ். மாவட்டம்
த-மு. முள்ளியவளை

**லெப். வசந்தி**
**அமிர்தநாதன் மேரிஏஞ்சலா**
யாழ். மாவட்டம்

26-05-99 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவம் பதுங்கி இருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**வீரவேங்கை இதயக்கனி**
**மாரிமுத்து புஸ்பவல்லி**
ஓமந்தை வவுனியா
த-மு. வைத்தியசாலை பின்புறம், மடு மன்னார்.

## மலேசியாவில் "நாட்டுப்பற்றாளர்" எம்மை விட்டு பிரிந்தார்



நாட்டுப்பற்றாளர் தோமஸ் ஹன்ட் போகரத்தினம் அவர்கள் 11.05.1999 அன்று சுகயீனம் காரணமாக மலேசியாவில் காலமானார்.

இவர் 1923 ஆண்டு மலேசியா மண்ணில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தமிழீழம் சென்று கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரியில் பயின்றார். பின்பு மலேசியா திரும்பி மலாயா பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்றார். அதைத் தொடர்ந்து இரண்டு வருடங்கள் ஆசிரியராக பணியாற்றினார்.

1957ம் ஆண்டு மலேசியா வெளிவிவகார அமைச்சில் இணைந்தார். இவர் பல நாடுகளில் மலேசியத் தூதரகத்தில் பணியாற்றினார்.

அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஜப்பான், போன்ற நாடுகளில் அதிகாரியாகவும் சென்னையில் மலேசியத் தூதரக முதல்த் தர அதிகாரியாகவும்.

நைஜீரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் துணைத் தூதுவராகவும் பணிபுரிந்தார்.

தமிழீழ மக்களுக்கு எதிராக திட்டமிட்டு சிங்களவர்களால் நடாத்தப்பட்ட படுகொலைகளை உலகம் கண்டு கொண்ட ஜூலை இனக்கலவரத்தின் பின்னர், தமிழீழ மக்களின் பாதுகாப்பிற்கு தமிழீழம் ஒன்றே என்ற தீர்க்கமான முடிவுடன் தமிழீழ விடுதலைக்காக கடந்த 16 ஆண்டுகளாக தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை உலக நாடுகளுக்கு தன்னுடைய எழுத்து மூலமாக எடுத்துரைத்து வந்தார். அவர் இரண்டு ஆங்கில நூல்களை எழுதி வெளியிட்டார். (Why is Tamil Eelam, Reading Tamil History)

அத்துடன் மலேசியாவில் செயற்பட்டு வந்த தமிழீழ ஆதரவாளர்களுக்கு ஒரு ஆலோசகராகவும் நல்ல வழிகாட்டியாகவும் இருந்தார்.

அவரின் சேவையை மதிப்பளிக்கும் முகமாக 1997ம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் "நாட்டுப்பற்றாளர்" என விருது வழங்கி சிறப்புச் செய்யப்பட்டார்.

அவரது தன்னலமற்ற சேவையை பாராட்டுவதோடு எம் மத்தியில் வாழ்ந்த ஒரு சிறந்த நாட்டுப்பற்றாளரை இழந்துள்ளோம். தமிழீழ விடுதலை வரலாற்றில் அவரது பங்கு என்றும் பதிவில் இருக்கும்.

அவரது இறுதிப் பயணத்தில் தமிழீழ போராட்ட ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர். அத்துடன் சகல மரியாதையுடன் பூதவுடல் தகனம் நடைபெற்றது.

## ஈகம் நிறைந்த ஈழப்பெரியவர்

- இரா.திருமாவளவன் -

போரகத்தினம் [illegible]
ஈகம் நிறைந்த ஈழப்பெரியவர்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உயர்நிலை பொறுப்புகள் உயர்நிலை தொடர்புகள்
பெரும்புகழ் எல்லாம் பெற்றிருந் தாலும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]



# வருவோம் எனச் சொன்னால்...

# வருவார்!

யாழ். குடாநாட்டில், இராணுவ நிர்வாகம் மெல்ல மெல்லப் பிடிதளர்ந்து செல்கின்றது. வாரத்தில் இரண்டு நாட்கள் பணிக்குச் செல்லாமல் தவிர்க்குமாறு, விடுக்கப்பட்ட அறிவுறுத்தலை ஏற்று, பணிக்குச் செல்வதில்லை என்று, அரசாங்க செயலகங்கள் மற்றும் திணைக்கள ஊழியர்கள் முடிவு செய்து விட்டனர் என்றே கொள்ள வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரின் கையொப்பத்துடன், செயலகங்கள், திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் சென்றிருப்பதாக சொல்லப்படுகின்ற போதும், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இதுவிடயத்தில் எக்கருத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை. இருந்தபோதும், சிங்கள அரசின் நிர்வாகத்தையோ, அதன் இராணுவ ஆட்சியையோ தமிழீழப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதும், சிவில் நிர்வாகம் என்ற பெயரிலான இந்த அமைப்பு முறைகளை விடுதலைப் புலிகள் விட்டுவைக்கப் போவதில்லை என்பதும் கேள்விக்கிடமில்லாத தெளிவான விடயங்களாகும்.

யாழ்.குடாநாட்டில் சிவில் நிர்வாகம் தான் இருக்கின்றது. சிவிலியன்களாலேயே அனைத்து நிர்வாகங்களும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா கண்ணைமூடிக்கொண்டு பொய்யுரைத்தாலும், அங்கு இராணுவ நிர்வாகமே தலைவிரித்தாடுகின்றது என்பது பட்டவர்த்தனமாய் புலப்பட்டு நிற்கின்றது.

சிங்கள ஆட்சிபீடத்துக்கு, குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சிக்கல் நிலை சிலவேளைகளில் அதனை உண்மை சொல்ல வைக்கின்றது. அதே வேளை, உண்மை நிலைப்பாட்டை செயலிலும் காட்டவைக்கின்றது.

யாழ். குடாநாட்டில் மே மாதம் நடுப்பகுதியில் இருந்து, சிங்கள அரசின் இந்த நிர்வாகச் செயற்பாடுகள், சிக்கல் நிலையை எதிர்கொண்டுள்ளது. யாழ். குடாநாட்டில், யாழ்ப்பாணம், கோப்பாய், நீர்வேலி, மல்லாகம், தெல்லிப்பளை என ஆரம்பித்து, இந்த ஒத்துழையாமை இயக்கம், இன்று வடமராட்சியில் இராணுவத்தின் பிடி அதிகரித்திருக்கும் பகுதிகளுக்குக்கூட பரவியிருக்கின்றது. இந்த ஒத்துழையாமை இயக்கம், தமிழீழப் பகுதி தழுவிய ஓர் பேரியக்கமாக உருவாகும். சிவில் நிர்வாகம் என்ற பெயரில் தாம் நடத்தும் இராணுவ நிர்வாகம் செயலிழந்து போகும். பிராந்தியங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது ஆக்கிரமிப்புத் திட்டங்களும் தோல்வியில் முடிவடையும் என, சிறீலங்கா அரசு நிரம்பவும் அச்சம் கொண்டுள்ளது.

இரண்டு நாள் விட்டுப்பார்த்த சிங்கள இராணுவத்தலைமை, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, கொழும்பில் மே 27ம் திகதி, இராணுவ அதிகாரிகள், பாதுகாப்பமைச்சக அதிகாரிகள் கலந்துகொண்ட உயர்மட்ட ஆலோசனையொன்றை நடத்தியது. இவ் உயர்மட்ட ஆலோசனையில் கலந்துகொண்டு திரும்பிய, யாழ். குடாநாட்டு இராணுவக் கட்டளையதிகாரி நோகான் குணவர்த்தனா, மறுநாள், பலாலியில் கூட்டமொன்றை நடத்தினார். யாழ். அரசாங்க அதிபர் உட்பட, செயலக அதிகாரிகள், திணைக்களங்களின், கூட்டுத் தாபனங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகள் என, ஐம்பதுக்கும் மேற்பட்டோர் அழைக்கப்பட்ட அக்கூட்டத்தில், இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அரசாங்க ஊழியர்கள் பணிக்குப் போவது அவர்களின் கடமை என உரைக்கப்பட்டது.



இந்த ஒத்துழையாமை இயக்கம், தமிழீழப் பகுதி தழுவிய ஓர் பேரியக்கமாக உருவாகும். சிவில் நிர்வாகம் என்ற பெயரில் தாம் நடத்தும் இராணுவ நிர்வாகம் செயலிழந்து போகும். பிராந்தியங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது ஆக்கிரமிப்புத் திட்டங்களும் தோல்வியில் முடிவடையும் என, சிறீலங்காஅரசு நிரம்பவும் அச்சம் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பலமின்றிப் போயுள்ளனர். அவர்களை அலட்சியப் படுத்திவிட்டு, தமது பணிகளை செய்வது அரச ஊழியர்களின் கட்டாய கடமை எனவும் போதிக்கப்பட்டது. கடமைக்குச் செல்லும் ஊழியர்களுக்கு, இராணுவம் பூரண பாதுகாப்புக் கொடுக்கும் எனவும், நோகான் குணவர்த்தனா உத்தரவாதமளித்தார்.

சிங்கள இராணுவ அதிகாரிகளின் பிரசங்கத்தை, ஆறுதலாகவும் அமைதியாகவும் செவிமடுத்த யாழ். அரசாங்க அதிபர் உட்பட அனைவரும், கூட்டாக ஒன்றைத் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலை, அலட்சியப்படுத்த முடியாதெனவும், இராணுவத்தின் கோரிக்கைகளையும் உத்தரவாதத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்தனர்.

நோகான் குணவர்த்தனா விடுவதாக இல்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்துப்பார்த்தார், சற்று மிரட்டவும் முற்பட்டார். ஆனால் யாரும் மசிந்துகொடுப்பதாய் இல்லை. மூன்று மணித்தியாலங்கள் முயற்சித்தும் எதுவுமே சரிப்பட்டுவராததில் கோபம். மீண்டும் யூன் முதலாம் திகதி கூட்டம் வாருங்கள், நல்ல பதிலுடன் வாருங்கள் என்று கூறி வழியனுப்பி வைக்கத்தான் அவரால் முடிந்தது. இதற்கிடையில், மீண்டும் கொழும்பில் கூட்டம். என்ன செய்வது என்று, அரசாங்கம் மூளையைப்போட்டு பிராண்டிக்கொண்டிருக்கின்றது. மூளையைக் கசக்கிக்கொண்டிருக்கின்றது.

இதுவிடயத்தை முன்னையவை போல் அல்லாமல், நிதானப்போக்கையும் மென்மைப்போக்கையும் கடைப்பிடித்தே அணுக வேண்டும் என்பது சந்திரிகாவின் அறிவுறுத்தல். குடாநாட்டில், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மீண்டும் அதிகரித்திருக்கும் நிலையில், அதன் நகர்வுகள் நாளும் பொழுதும் விரித்தியடைந்துவரும் நிலையில், அரச ஊழியர்களையும், அதிகாரிகளையும் விடுதலைப் புலிகள் பக்கம் திரும்பவிடும் வேலையை செய்துவிடக் கூடாது என்பதே அரசாங்கத்தின் கவலை.

வேலைக்கு சமூகமளிக்காத ஊழியர்கள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமது சட்டத்தில் இடமுண்டு என்றாலும், தமது கையிற்கு அப்பாற்பட்ட விடயம் அது என்கின்றார், சிறீலங்கா பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் சேனரட்ன. அதாவது இராணுவத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு சிவில் நிர்வாக விடயத்தில், பொதுநிர்வாக அமைச்சு தலையிடாது என்கின்றார் அவர்.

யாழ். குடாநாட்டில், சிவில் நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் குழப்புகின்றார்கள், பொதுமக்களிற்கு சிரமத்தை ஏற்படுத்துகின்றார்கள் என்று கூறமுற்படும், கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்படும், சில கூலிச்

வேலைக்கு சமூகமளிக்காத ஊழியர்கள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமது சட்டத்தில் இடமுண்டு என்றாலும், தமது கையிற்கு அப்பாற்பட்ட விடயம் அது என்கின்றார், சிறீலங்கா பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் சேனரட்ன. அதாவது இராணுவத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு சிவில் நிர்வாக விடயத்தில், பொதுநிர்வாக அமைச்சு தலையிடாது என்கின்றார் அவர்.

செயற்பாட்டாளர்களுக்கு, யாழ். குடாநாட்டு நிர்வாகம் குறித்து ஓர் தெளிவை ஏற்படுத்தும் முயற்சியில்தான் சேனரட்னா இதனைத் தெரிவித்தாரோ தெரியவில்லை. ஆனால், மேற்படி கூலிச் செயற்பாட்டாளர்களுக்கு எதுவுமே விளங்கிக்கொள்ள சாத்தியமில்லை.

அரசாங்கத்தின் கணிப்புகள், திட்டமிடல்கள் எல்லாம் இருந்தபோதும், குடாநாட்டில், விடுதலைக்கான செயற்பாடுகள் அதிகரித்துவருவது வெளிப்படையானது. குடாநாட்டில் பரவலாக நடைபெறும் சிறு சிறு தாக்குதல்களும், பிரச்சாரச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. மாணவர் எழுச்சியும் மக்கள் எழுச்சியும், விடுதலைப் புலிகளின் குடாநாட்டுவரவை எதிர்வு கூறுகின்றன. சிங்கள இராணுவ நிர்வாகச் செயலிழப்பும் அதன் அறிகுறியே எனக்கொள்ளப்படுகின்றது.

வன்னியில் பெரும் போரெழுச்சியே பற்றியெரிகின்றது. ஆட்டிலறித் தளம், போர்ப்பயிற்சிகளும், ஒரு நீண்ட சமருக்கு விடுதலைப் புலிகள் தயாராகின்றனர் என்ற கலக்கத்தை சிங்களத் தரப்பிற்கு ஏற்படுத்தியுள்ளது. அக்கலக்கத்தில், விடுதலைப் புலிகள் கட்டாயப் பயிற்சி கொடுக்கின்றனர் பலவந்தப்படுத்தி யுத்தம் செய்யவைக்கின்றனர் என்றெல்லாம் சிங்கள அரசும் அதன் ஊதுகுழல்களும் ஓலமிடுகின்றன.

சமாதான முயற்சிகளைப் புறந்தள்ளி யுத்தத்தின்மூலம், இன அழிப்புக்கொள்கையை பூரணமாக ஏற்றுக்கொண்டதன் மூலம் தன்னை நிரூபிக்கும் முயற்சியில் சிறீலங்கா அரசு ஈடுபட்டிருக்க, அக்கொடிய இன அழிப்பில் இருந்து தமிழ் மக்களை, தேசத்தை காக்கும் வரலாற்றுக் கடமையை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர். அதற்கான செயற்பாடுகளில் விடுதலைப் புலிகள் தீவிரமாகவும், திடமாகவும் இறங்கியுள்ளனர் என்பது, எதிரிகளின் கூப்பாடுகளின் ஊடு கேட்கமுடிகின்றது.

**சுப்பு**

# கணப்பொழுது



## மேஜர் தங்கேஸ்

1971 பங்குனித் திங்கள் 21ம் திகதி நம்பியார் இராமச்சந்திரன் தம்பதிகளின் செல்வப்புதல்வனாய் மறத்தமிழ் மகனாய் முத்துக்கள் விளையும் பூமி முருங்கனில் ராஜேந்திரம் என்னும் பெயருடன் இம் மண்ணில் உதித்தான். இவன் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தும் இவனது தந்தை இவனின் ஆரம்பக்கல்வியை மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் பயிற்றுவித்தார். இவன் ஆசிரியர்கள் மத்தியில் நற்பெயருடனும் திறமையானவனாகவும் செயற்பட்டு வந்தான். இவனது திறமைகளைக் கண்டு ஆசிரியர்கள் இவனை மகாவித்தியாலயத்தின் மாணவர் தலைவனாக நியமித்தனர்.

இக்காலப் பகுதியில் எமது கிராமம் இந்திய ஆக்கிரமிப்பாளர்களால் சுற்றி வளைக்கப்பட்டு தேசவிரோதிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டும் வந்தது. இக் காலப்பகுதியில் தான் இவன் எமது நாட்டில் நடக்கும் செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி இடவேண்டும் என்ற நோக்குடன் இவன் தனது நண்பர்களிடம் "மச்சான் நாம் அடிமைகளாய் வாழ்கிறதைவிட விடுதலைக்காய் போராடி சாவதுமேல், நான் ஒரு முடிவு எடுத்திட்டன் நான் இயக்கத்திலை இணையப் போறன்" என்று கூற அவனுடன் நண்பர்களான 2ம் லெப் நளாகம், லெப்ரினன் றொபேட்டும் 1988ல் இணைந்து எமது அமைப்பில் பதிவாகினர். பதிவானதும் இவனுக்கு தங்கேஸ் என்னும் பெயர் சூட்டப்பட்டு மன்னாரில் 9வது அணியில் பயிற்சி பெற்றான்.

இவன் பயிற்சி முகாமில் திறமையாக பயிற்சி பெற்று பொறுப்பாளர் மத்தியில் நற்பெயருடன் [illegible]. பயிற்சி முடிந்ததும் அரசியல் வேலைத்திட்டத்திற்காய் தனது சொந்தக் கிராமத்திற்கே அனுப்பப்படுகின்றான். இவன் தனது [illegible] மக்களுக்கு [illegible] அமைப்பைப் பற்றியும், எமது போராட்டத்தையும் தெளிவு படுத்தியவன், அந்நேரம் இவன் நின்றுவிடவில்லை, இவனது திறமைகளைக்கண்ட மன்னார்மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த லெப்ரினன் கேணல் சுபன் அண்ணன் அப்போது மன்னார்த்தீவுப் பொறுப்பாளராக இருந்த லட்சுமன் அண்ணனுடன் இவனை விட்டார். அங்கும் கொடுக்கும் வேலைகளை திறம்பட செய்து முடித்தான்.

அக்காலப்பகுதியில் 2ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியது. அந்நேரம் மன்னார் பழையபாலம் என்னும் இடத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவம்மீது தாக்குதல் நடாத்த பொறுப்பாளர்களால் திட்டம் தீட்டப்பட்டு தாக்குதல் நடாத்தப்படுகின்றது. இத்தாக்குதலில் தங்கேசுக்கும் பங்கு பற்ற அனுமதி கிடைத்தது இத்தாக்குதலில் ஏராளமான படையினர் கொல்லப்பட்டனர். இம்முகாம் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் இவன் திறமையாகசெயல்பட்டு களமாடினான். அத்துடன் மன்னாரில் நடைபெற்ற பல தாக்குதல்களில் பங்கு பற்றி தனது திறமைகளை வெளிக்கொணரத் தவறவில்லை இதற்காக தளபதியிடம் பாராட்டுக்கள் பல பெற்றான். இவனது திறமைகளைக் கண்ட மன்னார்மாவட்ட சிறப்புத்தளபதியாக இருந்த லெப்ரினன் கேணல் சுபன் அண்ணன் 1991ல் தன்னுடன் தங்கேசை எடுத்துக் கொள்கின்றார்.

இந்நேரம் சிலாபத்துறைக்கு கொண்டச்சியிலிருந்து வரும் இராணுவத்தினர் தாக்குதல் நடாத்த சுபன் அண்ணனால் திட்டம் வகுக்கப்படுகின்றது. இத்தாக்குதலுக்கு தங்கேசின் திறமையான செயல்களைக்கண்டு தங்கேசை ஒரு குழுவிற்கு அணித்தலைவனாக அனுப்புகின்றார். இத்தாக்குதலிலும் தங்கேஸ் தனது திறமையைக் காட்டத்தவறவில்லை. இத்தாக்குதலில் இவன் காலில் விழுப்புண் அடைகின்றான். பின் 1992 காலப்பகுதியில் மன்னார்மாவட்ட சிறப்புத் தளபதியால் இவன் வேறு துறைக்கு விடப்படுகின்றான் அங்கும் இவனது திறமைகள் வெளிப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்றது. அத்துறையிலும் இவனது திறமைகளைக்கண்டு பொறுப்பாளர்களின் பாராட்டைப்பெற்று ஓர் படி வளர்கின்றான். அதன் பின்பு தங்கேஸ் தாக்குதல்களுக்கு செல்லவேண்டும் எதிரியை எமது எல்லையைவிட்டு விரட்டவேண்டும் என்ற நோக்குடன் தான் தாக்குதல்களுக்கு செல்வதற்கு பொறுப்பாளரிடம் அனுமதி கேட்கின்றான்.

இவனது தொடர்ச்சியான வற்புறுத்தலால் அப்போது மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதியாக இருந்த பாமா அண்ணன் இவனை தாக்குதல் குழுவில் குறிப்பிட்ட சில அணிகளுக்கு பொறுப்பாளனாக விடுகின்றார். இந்நேரம்தான் பூநகரி தவளைத்தாக்குதல் திட்டமிடப்பட்டு தாக்குதலும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் தங்கேஸ் மிகவும் திறம்பட தனது அணிகளை நகர்த்தி தாக்குதல்களை மேற்கொண்டு [illegible] எதிரியின் தாக்குதலால் காயமடைகின்றான்.

பின் 1994ல் மாவட்ட சிறப்புத்தளபதியால் மாவட்ட வேவு அணிக்கு இரண்டாவது பொறுப்பாளனாக தங்கேஸ் விடப்படுகின்றான். தாக்குதல்களில் மட்டுமல்ல வேவு வேலைகளிலும் எதிரியின் காவலரண்களுக்கு அண்மையில் சென்று வேவு பார்த்து வந்தான். பின் மாவட்ட சிறப்புத்தளபதியின் மெய்க்காவலனாக இவன் தேர்ந்து எடுக்கப்படுகின்றான்.



இதன் பின்பு இவன் பல தாக்குதல்களுக்கு தலைமை தாங்கி தாக்குதல்களை நடாத்தி வருவதற்கு சிறப்புத்தளபதி அனுமதிக்கின்றார்.

[illegible]

எழுதியவர் - போராளி [illegible]

12ம் பக்கத் தொடர்ச்சி

### விண்ணிலிருந்து

ஆசுவாசப்படுத்தியது.

தேவகி தனது வேலைகளைக் கவனிக்கலானாள். கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் தேநீர் தயாரித்துக் கொடுத்துவிட்டுத் தானும் குடித்தாள். பின்னர் காலை உணவுக்காகப் பாண் வாங்குவதற்கு உண்டியலில் கிடந்த சில்லறைகளைத் தட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். கடை வாசலில் பெரும் கூட்டம் நின்றிருந்தது. ஏற்கனவே ஒரு பெட்டி பாண் வந்து தீர்ந்து விட்டதாம். அடுத்தது வரும் வரை அனைவரும் காத்திருந்தனர். தேவகியும் அந்தக் கூட்டத்தினருடன் இணைந்து கொண்டாள்.

ஏதோ இரைச்சலொன்று விண்ணிலிருந்து கேட்டது. அனைவரும் அதனை உன்னிப்பாகச் செவிமடுத்தனர். சந்தேகமில்லை அது கிபீர் விமானத்தின் இரைச்சல் தான்.

இரைச்சல் படிப்படியாக அதிகரித்து அவர்களது தலைக்குமேல் அதிர்ந்த போது, செய்வதறியாது நிலைகுலைந்த மக்கள் சிதறி ஓடினர். மரங்களின் கீழ் சிலரும், நிலத்தில் சிலருமாக அனைவருமே குப்புறப்படுத்துக் கொண்டனர்.

'ஓஓம்... ஓஓம்...'

நிலத்தின் அதிர்வுகள் அவர்களது செவிகளுக்குத் துல்லியமாகக் கேட்டது. பதிந்து குண்டுகளை வீசிய விமானம் அவர்களுக்கு மேலாக உயர்ந்து எழுந்த போது......

அங்கு தெய்வத்தை வேண்டாதவரில்லை. தேவகியும் இறைஞ்சினாள்.

'எம் பெருமானே என்ரை பிள்ளைகளை காப்பாற்றி விட்டிட்டு என் அப்பனே'

[illegible]




ஐந்து வகை வடிவங்களிலும் ஆறு வகை படங்களிலான குறித்த நேரத்தில் எச்சரிக்கை மணியடிக்கும் அழகான கடிகாரங்கள் இத்தாலிப் பணியகத்தின் வெளியீட்டுப் பிரிவினரால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு :— வெளியீட்டுப் பிரிவு இத்தாலிப் பணியகம்

மாணவர் எழுச்சி நாள் 1999

[illegible]



உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவையின் கீழைத்தேய கலைகளைப் பயிலும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் பங்குபற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும், 13.06.1999 நடைபெறும் ஓவியப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கான சான்றிதழ்களும் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

13.06.99 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி

**Rest. Doncamilo, 3008 Bern,**

Insel Spital அருகாமையில்

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு - சுவிஸ் பணியகம்


## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

### அன்புச் சகோதரமே!

[illegible]

அன்பின் ஆசிரியர்

**(03.06.1999)**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### மக்களின் நெஞ்சை உருக்கும் அனுபவங்கள்

இங்குள்ள எல்லாக் குடும்பத்தினருமே ஏதோ வகையில் இழப்புக்கள் உள்ளவர்களாக உள்ளனர். நான்கு குழந்தைகளையும் சிறீலங்காவின் குண்டு வீச்சுக்குப் பறிகொடுத்த தாய் ஒருவரின் கதை நெஞ்சைப் பிளக்கும். மீனவக் கிராமம் ஒன்றில் வாழ்ந்த அந்த தாய்க்கு சிறீலங்காவின் ஜெட் விமானங்கள் வீசிய குண்டுகள் இந்த அவலநிலையைத் தோற்றுவித்தது. பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பெற்றோரில் அல்லது குடும்பத்தில் ஒருவரை இழந்தவராகவே உள்ளனர். ஒரு பன்னிரெண்டு வயதுச் சிறுமி மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் தனது சோக அனுபவத்தை விவரித்தாள். தான் வீட்டு முன் முற்றலில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது தனது வீட்டிற்கு மேல் குண்டு வீசப்பட்டதாகவும் தன் தாயார் சமையல் அறையில் இருந்து தீப்பற்றியெரியும் சேலையுடன் ஓடிவந்து அலறியபடியே தன் கண்முன்னால் துடிதுடித்து செத்த அந்தச் சம்பவத்தைக் கூறிய அந்தச் சிறுமி என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அந்த துயர நினைவின் தாக்கத்தில் அவ்விடத்திலேயே மயங்கி வீழ்ந்தாள். இன்னுமொரு சிறுவன் தன் தாயும் தந்தையும் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட சோகத்தை விவரித்தான். நான் வன்னிக்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக குண்டு வீச்சொன்றில் 30 அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட வரலாற்றையும் அதில் விழிப்புலன் அற்றவர்களின் பள்ளிக்கூடம் ஒன்று கூட சிறீலங்கா விமானப்படை விமானங்களினால் இலக்காக்கப்பட்ட மனிதாபமற்ற செயற்பாட்டையும் எனக்கு எடுத்து விளக்கினர்.

### வன்னிப் பாடசாலைகளின் அவலநிலையும் ஆசிரியர்களின் உயர்சேவை மனோபாவமும்

வன்னிப் பகுதி பாடசாலைகள் அனைத்தும் எல்லாவிதமான போதாமைப் பிரச்சினைகளுடனும் உள்ளன. ஆனாலும் அங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி வழங்குவதினை தங்கள் இலட்சியமாக கருதி ஊதியம் எதுவும் பெறாது தம் வாழ்வையே அவர்களுக்காக அர்ப்பணித்து உயர் மனோபாவத்துடன் சேவையாற்றி வருகின்றனர். இவர்கள் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் தங்கள் கல்வித்துறைக்கு உதவவேண்டும் என்ற பெரிய எதிர்பார்ப்புடன் உள்ளனர். என்னைப் பற்றியும் வெளிபுலகில் வாழும் தமிழர்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் நான் சந்தித்த மாணவர்கள் நிறைய ஆர்வம் காட்டினர்.

### என்ன தெரிந்து கொண்டுள்ளீர்கள் எங்களை மறந்து விடாதீர்கள்

என்னை சந்தித்த இளம் மாணவர்கள் எல்லோரும் கடைசி ஐரோப்பா அவுஸ்திரேலியா வாழ் தமிழர்கள் எங்கள் வன்னி வாழ்வைப் பற்றி தெரிந்துள்ளனரா? அதாவது எங்களுக்கு ஏன் உலக நாடுகள் உதவாது இருக்கின்றனர்? போன்ற கேள்விகளை என்னிடம் தொடுத்தனர். பதினாறு வயது மாணவி ஒருவர் கலங்கிய கண்களுடன் எங்களை மறந்து விடாதீர்கள் என்று உரிமையுடன் கூறிய பொழுது என் நெஞ்சை சம்மட்டி கொண்டு அடித்தது போலிருந்தது. எங்களுக்கு உதவுங்கள் எங்களை மறந்து விடாதீர்கள் இது தான் அந்த மக்கள் என் மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள். இந்த வேண்டுகோளுக்கு நாம் எந்த

அளவுக்கு பதில் கூறப் போகின்றோம் என்பதைக் காலம் தான் கூறவேண்டும்.

### இதுவே அவர்கள் கேட்கும் தீர்வு

சுதந்திரத் தமிழீழத்தில் பாதுகாப்பான அமைதியில் வாழ விரும்புகள் இதுவே நான் சென்ற இடமெல்லாம் மக்கள் கேட்கும் ஒரே வேண்டுகோள். அவர்கள் தங்கள் அனுபவங்களின் அடிப்படையில் இதனையே பிரச்சினையை தீர்த்து வைக்கக்கூடிய ஒரே தீர்வாக மனப்பூர்வமான விருப்புடன் வெளிப்படுத்துகின்றனர். இதனை அவர்கள் ஒன்று மனஉறுதியுடனேயே அந்த மக்கள் தங்கள் எதிர்காலத்தை இவ்வாறு அறிவுகளுக்கு மத்தியிலும் நம்பிக்கையுடன் எதிர் கொள்கின்றனர். எங்களை மறந்து விடாதீர்கள் என்று அந்த மக்கள் என்னைப் பார்த்துக் கேட்கும் பொழுது அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வையும் மறந்து விடாது அவர்கள் அதனை அடைந்து பாதுகாப்பான அமைதியில் வாழ உழைப்பது நம் கடமை.

(கடைசி ஓட்டம் ஜெர்மனியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கில மொழி சாட்சியத்தின் தமிழாக்கம்)

# பிணைப்பு

– அநாமிகன் –

மாவீர நண்பா!
காற்றோடு கதறுகிறேன்
காதுகளை விரித்துக்கொள்
மண்ணோடு நெஞ்சு பதித்து
மனசோடு விம்முகிறேன்
இந்த மண் அதிர்வை
மொழி பெயர்த்துக்கொள்.
இன்று - என்
முற்றத்து மல்லிகை
மொட்டுடை அவிழ்த்து
பனியினில் நீராடி
பட்டுமேனி காயாது
விடியுமுன்பே விழித்திருக்கும்.
நாளை பூக்கவிருந்த
கனகாம்பரமும் - இன்றுனக்காய்
பிரசவமாயிருக்கும்.
தூங்குமுன் தொட்டிலை நிரப்ப
வாடிய வாழையுடல்கள்
தோளை உயர்த்தியுனை
குளிர்விக்க குதித்தெழும்.

நீயும் - என் வரவின்
ஸ்பரிசத்திற்காய்
பார்த்திருப்பாய் - எனை
காணாது கட்டாயம்
வேர்த்திருப்பாய்.

போனமுறை கல்லறைக்குப்
பூவோடு வந்தேனடா
போகும்போது பாசறைக்கு
முடிவோடு போனேனடா
இப்போ எல்லையில் நிலை எடுக்க
எதிரி குலை நடுங்க

விழித்திருக்கும் வேளையிலே
உன் நினைவுடன் நான்
கொதித்தாமிழும் - என்
துப்பாக்கிக் குமுறல்களில் -
உனக்கு
கோடி அஞ்சலிகள்
நண்பா! கொஞ்சம் பொறுத்திரு
விடிந்தபின் - அன்றேல்
மடிந்தபின்
அதுவரை காத்திரு

ஓடியுயிர் போயிறாவிடின்
விடிந்தபின் தேடிவருவேன்
உன் பாதத்தடிக்கு

கருவியை - உடன்
கைத்தடியை - உன்
மடியினில் சாத்தி
ஆற அமர்ந்து - எம்
வீரக்கதைகள் சொல்வேன்
அப்போ கருமைக்குள் சிதறி
கதை கூற முடியாது
காற்றோடு கலந்த
அநாமிகங்களின்
மூச்சுக்களும் - உந்தன்
முகவரி சுமந்து வரும்.
அன்று நடுநிசியில்
நாமெழுந்து
நர்த்தன மாடுவோம்.

# குழிகளுக்குள்ளே வாழ்பவர்கள்

– அமரேசன் –

கண்களில் தெரிகிறது!
விடுதலை – ஒளி
நேரான பார்வை
குறி தவறாத இலக்கு.

அவன் தேர்ந்தெடுத்த இலக்கு
அவனும் மனிதன், நானும் மனிதன்
அவலங்கள் குடியேறிய
அவலம் மிக்க நிலம் இன்று!

பனி, குளிர், வெயில் – அவனுக்கு
பழக்கப்பட்டு விட்டது
உண்ண, மறுக்கிறது அவன் உள்ளம்
உறங்காத விழிகளுடன்
உறுதியாய் அந்தக்குழிகளுக்குள் வாழ்வு

சுயநலவாதிகள்
சுகபோக வாழ்க்கை
சுகமாக வாழ
சுடுகோல் கையில் ஏந்தி
சுட்டெரித்திட அவன் பணி

சுதந்திரம்!
இதன் பொருள் என்ன?
சும்மாகிடைப்பதில்லை
ஓர்கணம் அந்தக் குழிக்குள்
வாழும் ஜீவன்களை எண்ணுகிறேன்.

உறவுகளை பிரிந்து
உயர் தலைவன் தலைமையில்
உன்னதமான வாழ்வுக்கு
உழைக்கும் அந்த வீரன்.

இரவின் பொழுதில்!
ஒவ்வொரு அசைவையும்
உன்னிப்பாய் உற்று நோக்கும்.
உன்னத பணியை அவன்
உண்மை செய்கின்றான்.

பட்டம் பதவி புகழ்?
பாரினில் நிலைப்பதில்லை
விடுதலை தேடி விதைகளான
வீரர்கள் உண்மை
அழிவதில்லை.

குழிக்குள் உறங்கும்
உறவின் கதையை
உறவுகள் ஓர் நாள் சொல்லும்
உலுத்தர்கள் கொடுமைகளை
எல்லாம்
ஓர் நாள் அடங்கிப் போகும்.

குழிக்குள் வாழும் புனிதரே!
குருதியால் குளிக்க எல்லை
வைத்தவர்!
குடல்கள் வீதியில் கிடந்து நாறும்
குழிகளில் வாழும் ஜீவன்களே!
உறங்குங்கள்.
துணிவோடு நாங்கள் பணி
தொடர்வோம்
துணிவோடு எங்கள் பாதமும்
துட்டரை அழித்திட நடக்கும்.

